# வரலாறு சமூகக்கல்வி பயிற்சிகள்

(வினா - விடை)

(புதிய பதிப்பு - 1994)

ஆண்டு

# 10


ஆக்கம்

கமலா குணராசா, B. A. (Cey.), Dip. in Ed.


*

- பாட ஒழுங்குப் பயிற்சிகள்
- தவணை ஒழுங்குப் பயிற்சிகள்
- வருட இறுதிப் பயிற்சிகள்


ஸ்ரீ லங்கா புத்தகசாலை,

234, காங்கேசன்துறை வீதி, — யாழ்ப்பாணம்.

## வினாத்தாள்: 1

# உலகின் பௌதிகச் சூழல்

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் தரப்பட்டிருக்கும் விடைகளுள் சரியானதைத் தெரிவு செய்க.

1. பௌதிகச் சூழல் என்பது,
   (1) மனிதனும் அவனது செயற்பாடுகளும்,
   (2) தரைத்தோற்றம், காலநிலை, இயற்கைத் தாவரம், கனிப் பொருள்
   (3) பயிர்ச்செய்கை, கைத்தொழில், வர்த்தகம்
   (4) மலைகள், நதிகள், மழை, பயிர்கள், விலங்குகள்
   —என்பனவாகும்.

2. புவியின் மேற்பரப்பில் நீரினால் மூடப்பட்ட பரப்பு:-
   (1) 39% (2) 60% (3) 71% (4) 40%

3. 'அ' பகுதியிலுள்ள கண்டங்களை 'ஆ' பகுதியிலுள்ள மலைகளுடன் பொருத்தி இலக்கத்தை நாடுகளின் எதிரே எழுதுக.

| (அ) கண்டங்கள் | (ஆ) மலைகள் |
|---|---|
| 1. ஆசியா ............ | (அ) றொக்கி மலை |
| 2. ஆபிரிக்கா ............ | (ஆ) அல்ப்ஸ் மலை |
| 3. வடஅமெரிக்கா ............ | (இ) பெரியபிரிப்பு மலை |
| 4. தென்அமெரிக்கா............ | (ஈ) இமய மலை |
| 5. ஐரோப்பா ............ | (உ) அந்தீஸ் மலை |
| 6. அவுஸ்திரேலியா ..... ..... | (ஊ) அற்லஸ் மலை |

4. 'அ' பகுதியிலுள்ள பௌதிக நிலத்தோற்றங்கள் எவை என 'ஆ' பகுதியில் எழுதுக. உ+ம்; யூரல் மலை.

| அ — பகுதி | | ஆ — பகுதி |
|---|---|---|
| 1. யூரல் | — | .................................................. |
| 2. பனாமா | — | .................................................. |
| 3. கஸ்பியன் | — | .................................................. |
| 4. இலங்கை | — | .................................................. |
| 5. கங்கை | — | .................................................. |
| 6. தீபெத் | — | .................................................. |
| 7. சகாரா | — | .................................................. |
| 8. எவரெஸ்ட் | — | .................................................. |
| 9. விக்டோரியா | — | .................................................. |
| 10. சுலைமான் | — | .................................................. |

5. பின்வரும் வாக்கியம் சரியா, பிழையா எனக் கூறுக.

'உலகில் மிக நீண்ட நதியான நைல், 6695 கி. மீ. தூரம் வரையில் பாய்ந்து மத்தியதரைக் கடலில் விழுகின்றது'.................

பின்வரும் பந்தியிலுள்ள இடைவெளிகளைப் பொருத்தமான விடைகளை எழுதி நிரப்புக.

புவியின் மேற்பரப்பில் ஏறக்குறைய (6) .................... நீரினால் மூடப்பட்டுள்ளது. சமுத்திரங்களில் மிகப் பரந்தது (7) ................ ஆகும். இதில் (8) ................. மீற்றர் ஆழமான (9)................ ஆழி காணப்படுகின்றது. கண்டங்களுள் மிகப் பெரியது (10) ........... கண்டமாகும். அதில் (11) ................மலைத்தொடர் அமைந்துள்ளது. ஆசியாக் கண்டத்தையும், வட அமெரிக்காவையும் 90 கி. மீ. ஆழமான (12) ....................நீரிணை பிரிக்கின்றது ஐரோப்பாவின் மிக நீளமான நதி (13) ................ ஆகும். உலகின் மிக நீளமான நதியாக விளங்கும் நைல் நதிக்கரையிலேயே, உலகின் பண்டைய நாகரிகம் காணப்படும் (14) ............. என்ற நாடு உள்ளது.

15. உலகின் மிக நீளமான நதியும் காணப்படும் கண்டம்:—
(1) நைல், ஆபிரிக்கா (2) அமேசன், தென்னமெரிக்கா
(3) மிசூரி மிசிசிப்பி, ஆபிரிக்கா (4) நைல், வட அமெரிக்கா

16, மேட்டு நிலங்களின் தொகுதி வருமாறு:—
(1) வோல்கா, கங்கை. திபெத்
(2) திபெத், பிறேசிலியன், மெசெற்றா
(3) காக்கசஸ், கயானா, ரஸ்ஸிலி
(4) பிரம புத்திரா, மெசெற்றா, கயானா.

17. உலகின் மிகப் பெரிய ஆழியும் காணப்படும் சமுத்திரமும்:—
(1) மரியானா, அவுஸ்திரேலியா (3) மரியானா, பசுபிக்
(2) பெரிங், இந்து சமுத்திரம் (4) சுவெஸ், அத்திலாந்திக்

18. தென் சமுத்திரம் மென்பது:—
(1) அந்தாட்டிக் சமுத்திரம் (2) ஆட்டிக் சமுத்திரம்
(3) இந்து சமுத்திரம் (4) பசுபிக் சமுத்திரம்

19. 1869, 1904 — 14 இல் வெட்டப் பட்ட கால்வாய்கள்:—
(1) கஸ்பியன், பனாமா (2) சுவெஸ், பனாமா
(3) பனாமா. அஸ் வான் (4) சுவெஸ், அஸ் வான்

20 வட அமெரிக்காவையும் ஆசிரியாவையும் இணைப்பது:—
(1) பீரிங் சமுத்திர நீரிணை (3) சுவெஸ் நிலத் தொடர்
(2) பனாமா பூசந்தி (4) பானமா நிலத் தொடர்

21. உலகில் மிகவுயர்ந்த மலைச் சிகரம்:—
(1) திபெத் (2) இமயமலை (3) எவரெஸ்ற் (4) றொக்கி

22. தென் அமெரிக்காவின் மிக நீண்ட ஆறு:—
(1) வொல்கா (2) மிசிசிப்பி (3) றைன் (4) அமேசன்

23. கோபி, சிரியா, அரபு பாலைவனம் அமைந்துள்ள கண்டம்:—
(1) ஆபிரிக்கா (2) ஆசியா
(3) ஐரோப்பா (4) அமெரிக்கா

24. அவுஸ்திரேலியாவின் நீளமான நதி:—
(1) மறே டாலிங் (2) அமேசன்
(3) வொல்கா (4) றைன்

25. யாங்சி கியாஸ் எங்கு உள்ளது:—
(1) இந்தியா (2) யப்பான் (3) சீனா (4) அமெரிக்கா

## வினாத்தாள்: 2

# காலநிலை மூலகங்களும் காலநிலையைக் கட்டுப்படுத்தும் காரணிகளும்

## பகுதி I

பின்வரும் வினாக்களுக்கான விடைகளுள் சரியான விடையின் கீழ் கீறிடுக.

1. மத்திய கோட்டுப் பகுதிகளில் வெப்பநிலை உயர்வாக இருப்பதற்குக் காரணமில்லாதது:
   (2) சூரிய கதிர்கள் ஊடறுக்கும் வளிமண்டலத்தின் தடிப்பளவு குறைவாக இருப்பது.
   (3) சூரிய கதிர்கள் சூடாக்கும் பரப்பளவு குறைவாக இருப்பது
   (4) சூரிய கதிர்கள் செங்குத்தாக வீழ்வதால், நிலம் கூடிய வெப்பத்தை உறிஞ்சிக் கொள்வது.

2. கடல் மட்டத்திலிருந்து குத்துயரமாகச் செல்லச் செல்ல, ஒவ்வொரு 100 மீட்டருக்கும் குறையும் வெப்பநிலை:
   (1) -1°F (2) -0.64°C (3) -6.4°C (4) -3°F

பின்வரும் வாக்கியங்கள் சரியா, பிழையா என்பதை வாக்கியத்தின் இறுதியிலுள்ள கோட்டில் எழுதுக.

3. மத்திய கோட்டிற்கு அண்மையில் உயர் வெப்பநிலை நிலவுவதோடு வடக்கேயும் தெற்கேயும் முனைவுகளை நோக்கிச் செல்லச் செல்ல சூரியக்கதிர்கள் சாய்வாக விழுவதால் வெப்பநிலை படிப்படியாகக் குறைகிறது ..........................................

4. படிவு வீழ்ச்சி எனப்படுவது, வளிக்கோளத்திலிருந்து திரவமாகவேனும் திண்மமாகவேனும் புவியை வந்தடையும் நீரைக் குறிப்பதில்லை ..........................................

5. காலநிலையின் மூலங்களாக வெப்பநிலை, படிவு வீழ்ச்சி, வளியமுக்கம், காற்று என்பன விளங்குகின்றன ......................

6. 'அ' பகுதியிலுள்ள அமுக்கவலயங்களை 'ஆ' பகுதியிலுள்ள அகலக் கோட்டமைவிடத்துடன் பொருத்தி எழுதுக.

| (அ) அமுக்கவலயம் | (ஆ) அகலக்கோட்டமைவிடம் (அகலாங்கு) |
|---|---|
| (1) மத்தியகோட்டுத் தாழமுக்கவலயம் | 30° — 35° |
| (2) அயன அயல் உயரமுக்க வலயங்கள் | 85° — 90° |
| (3) இடைவெப்பத் தாழ் அமுக்க வலயங்கள் | 5° வ — 5° தெ |
| (4) முனைவு உயரமுக்க வலயங்கள் | 60° — 65° |

7. பின்வரும் பந்தியிலுள்ள இடைவெளிகளை பொருத்தமான விடைகளை எழுதி நிரப்புக.

நீரானது (1) ........................ வெப்பத்தினால் சூடாக்கப்பட்டு நீராவியாக மாறி மேலெழுந்து குளிர்ச்சியடைந்து ஒடுங்குவதனால் மழை கிடைக்கின்றது இவ்வாறு மேலெழுந்து ஒடுங்கி. பிற்பகல் வேளைகளிற் பெய்யும் மழையை (2) ... ......... ............... மழை என்பர். ஈரலிப்பான காற்று குறுக்கிடும் மழையில் மோதி மேலெழுந்து காற்றுப் பக்கத்திற்கு மழையைக் கொடுக்கும். அம்மழையை (3) ............ ...........மழை என்பர். (4) ..................... மழையைத் தருகின்றன பூமியில் (5) ....................... பகுதிகளிலேயே அதிக மழை வீழ்ச்சி கிடைக்கின்றது.

பின்வரும் வரைபடத்தை அவதானித்த பின் கீழ்வரும் வினாக்களுக்கு விடை தரவும்.

(1) அதிக மழை வீழ்ச்சி நிகழும் இரு மாதங்களைக் கூறுக.


(அ) ........................ (ஆ) .....................

(2) வெப்பநிலை உச்சமான மாதம் எது? ................................

(3) ஜூலை மாத மழைவீழ்ச்சியளவு யாது? ...............................

(4) மழை மிகக் குறைந்த இரண்டு மாதங்கள் எவை?

.......... ....... ..... ...................... ....................




## பகுதி II

(1) புவியின் அமுக்க வலயங்களையும் காற்றுத் தொகுதிகளையும் விளக்கப் படத்தில் வரைக.

(2) கால நிலையின் அடிப்படை மூலகங்கள் எவை?

(3) படிவு வீழ்ச்சியென்றால் என்ன?

(4) உலகின் காலநிலைப் பிரதேசங்கள் எவை?

## வினாத்தாள்: 3

# காலநிலை வகைகளும் இயற்கைத் தாவரங்களும்

## பகுதி I

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் தரப்பட்டிருக்கும் விடைகளுள் சரியானதைத் தெரிவு செய்க.

**1.** வெப்பவலயம் என்பது:

(1) கடகக் கோட்டிற்கும் ஆட்டிக் வட்டத்திற்கும்.

(2) மகரக் கோட்டிற்கும் அந்தாட்டிக் வட்டத்திற்கும்.

(3) கடகக் கோட்டிற்கும் மகரக் கோட்டிற்கும்.
(4) ஆட்டிக் வட்டத்திற்கும் அந்தாட்டிக் வட்டத்திற்கும் இடைப்பட்டதாகும்.

2. மத்திய கோட்டுக் காலநிலையின் பொதுவான காலநிலை இயல்புகள்:
(1) 20°C வெப்பநிலை: 1040 மி. மீ. மழை.
(2) 27°C வெப்பநிலை: 2060 மி. மீ. மழை.
(4) 24°C வெப்பநிலை: 380 மி. மீ. மழை.
(4) 10°C வெப்பநிலை: 100 மி. மீ. மழை.

3. 'அ' பகுதியிலுள்ள காட்டு வகைகளுக்குரிய மரங்களை 'ஆ' பகுதியிலுள்ள அட்டவணையிலிருந்து தேர்ந்தெடுத்து எழுதுக.

| (அ) காடுகள் | (ஆ) மரங்கள் |
|---|---|
| (1) மத்திய கேகட்டுக் காடுகள் | பைன் |
| | புரூஸ் |
| (2) இலையுதிர் காடுகள் | ஒக் |
| | எலும் |
| (3) ஊசியிலைக் காடுகள் | கருங்காலி |
| | முதிரை |
| | பேர்ச் |
| | சிடர் |
| | ஸார்ச் |
| | நதுன் |
| | ஆஸ் |
| | மகோகனி (மலைவேம்பு) |

சரியா பிழையா என்பதை வாக்கியத்தின் இறுதியில் உள்ள கோட்டில் எழுதுக.

4. வெப்பமும் மழையும் குறைவின்றிக் கிடைக்கின்றபோது தாவரங்கள் செழித்து வளர்வதும், அக்காரணிகள் சரியாகக் கிடைக்காதபோது தாவர வளர்ச்சி பின்னடைவதும் இயல்பாகும்.
........................................

5. சவன்னா, லானோஸ், காம்போஸ் என்பன மத்தியகோட்டுக் காடுகளாகும். ..........................

6. பின்வரும் பந்தியிலுள்ள இடைவெளிகளைப் பொருத்தமான விடைகளை எழுதி நிரப்புக.

மத்திய கோட்டுக் காடுகளை (1) .................. காடுகள் என்றும் வழங்குவர். இவ்வகைக் காடுகளைச் சிறப்பாக (2) ....................... (3) ......................ஆகிய பிரதேசங்களில் காணலாம். முன்னேற்றமடையாத மக்கள் கூட்டத்தினரே இங்கு வாழ்கின்றனர். கொங்கோ நதிக்கரையில் வாழும் (4) ...................... இனத்தவர் இதற்கு உதாரணம். இப்பிரதேச மக்கள் (5) .........................ஆடுவதில் ஈடுபட்டுள்ளனர். மலாயா,. கிழக்கிந்தியத் தீவுகள் ஆகிய பிரதேசங்களிலுள்ள காடுகள் அழிக்கப்பட்டு றப்பர், தேயிலை (6) ........ ........... தோட்டங்கள் உண்டாக்கப்பட்டுள்ளன. காடுகளை அழித்துச் (7)....................ப் பயிர்ச் செய்கை செய்வதால் தீங்கு விளைகிறது. சேனைப் பயிர்ச் செய்கைக்காகக் காடுகளை வெட்டிக் கொளுத்துவதனால் மண்ணிலே காணப்படும் (8) ........................ அழிகின்றன. (9) ........................... ஏற்பட்டு நிலம் தரிசாகின்றது.

7. உலகப் படப் பயிற்சி: மறுபக்கத்திலுள்ள உலகப் படத்தை நன்கு அவதானித்து வினாக்களுக்கு விடைதருக.

(1) படத்தில் 2, 8 என இலக்கமிடப்பட்ட பிரதேசங்களின் பெயர்களையும், அப்பிரதேசங்களில் காணப்படும் காட்டு வகையையும் தருக.

(i) 2 என்பது ............................


(ii) 8 என்பது ............................

(iii) காடு ..............................

(2) படத்தில் 4 என இலக்கமிடப்பட்டவை நனிகுளிர் இடைவெப்பக்காலநிலைப் பிரதேசங்களாகும். இங்கு காணப்படும் காடு ................................

(3) படத்தில் 3 என இலக்கமிடப்பட்டிருப்பதன் காலநிலை வகை யாது?

(4) படத்தில் 5 என இலக்கமிடப்பட்டிருக்கும் பாலை நிலத்தின் பெயர்: ..........................



# பகுதி II

1. உலகில் காணப்படும் காடுகள் எவை? அவற்றை விளக்குக.
2. வெப்ப வலயப் பருவக் காற்றுக் காலநிலை நிலவும் நாடுகள் எவை?
3. மத்திய கோட்டு காலநிலை அம்சங்கள் 5 கூறுக.

## வினாத்தாள்: 4

# தொழினுட்பமும் விவசாயமும்

## பகுதி I

1. அபிவிருத்தியடைந்த நாடுகளில் விவசாயத்துறை உற்பத்தியின் அளவு உயர்மட்டத்திலிருப்பதற்குக் காரணம்:
   (1) நவீன விதைகளைப் பயன்படுத்துவதாகும்.
   (2) உயர் தொழில் நுட்பமாகும்.
   (3) மூலதனமதிகம் இருப்பதாகும்.
   (4) கைதொழில் நாடாக இருப்பதாகும்.

2. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுள் நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் நாடு:

(1) தைவான் (2) சீனா (3) இந்தியா (4) பாகிஸ்தான்

3. 'அ' பகுதியிலுள்ள விவசாய நிறுவனங்கள் நிறுவப்பட்ட நாடு 'ஆ' பகுதியில் மாறித் தரப்பட்டுள்ளன. சரியானவாறு பொருத்துக.

| (அ) நிறுவனம் | (ஆ) நாடு |
|---|---|
| (1) சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவனம் — | நைஜீரியா |
| (2) சர்வதேச கோதுமை சோளம் ஆராய்ச்சி நிறுவனம் — | இந்தியா |
| (3) சர்வதேச வெப்பவலய விவசாய ஸ்தாபனம் — | மெக்சிக்கோ |
| (4) சர்வதேச பயிர் ஆராய்ச்சி நிறுவனம் — | பிலிப்பைன் |

சரியா, பிழையா என்பதை வசனத்தில் இறுதியில் கோடிட்ட இடத்தில் எழுதுக.

4. குறிப்பிட்ட சிலபொருள்களை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய நுட்பம் பற்றிய முறையான கல்வியே தொழில் நுட்பமாகும் ..................................

5. பாரம்பரிய பயிரிடு முறைகளுக்கு அடிமைப்பட்டிருத்தல். பயிற்றப்பட்ட தொழிற்படையின்மை, விவசாயக் கல்வி பரவலாக நாடத்தப்படாமை அறிவைப் பரப்பும் பொதுசனத் தொடர்புச் சாதனங்கள் விருத்தியடையாமை என்பன இந்தியா, இலங்கை போன்ற நாடுகளின் விவசாய உற்பத்தித் துறையின் குறைவிருத்திக்குரிய காரணிகளல்ல ..................................

6. தரப்பட்ட உலகப் புறவுருவப் படத்தில் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக. (படம் பக்கம் 11 இல்)

1, தைவான், ,சீனா, இந்தியா, இலங்கை, ஆசெந்தீனா, ஐக்கிய அமெரிக்கா.



2. சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையம் (பிலிப்பைன்)
சர்வதேச உருளைக்கிழங்கு நிலையம் (பேரு)

## பகுதி II

1. விவசாய நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் ஐந்தினை விளக்கி எழுதுக.
2. நவீன தொழினுட்பத்தை பயன்படுத்திக் உற்பத்தியை பெருக்க வேண்டிய துறைகள் எவை?
3. தாய்வான் துரித முன்னேற்றமடையக் காரணம் யாது?
4. பின்வருவனவற்றின் சர்வதேச ஆராய்ச்சி நிறுவனம் எங்கு அமைந்துள்ளது?
   கோதுமை, நெல், உருளைக்கிழங்கு, பயிர், மிருகவளம்

# வினாத்தாள்: 5

# தொழில்நுட்பமும் கைத்தொழிலும்

## பகுதி I

1. பின்வரும் பந்தியிலுள்ள இடைவெளிகளைப் பொருத்தமான விடைகளை எழுதி நிரப்புக.

மனிதனின் தேவைகள் அதிகரித்ததன் காரணமாகப் பண்டங்களுக்கான (1) ........................ அதிகரித்தது. அதனால் பழைய இயந்திரங்களின் வினைத்திறன் கூடி, புதிய இயந்திரங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. கி. பி. 1455 இல் (2) ........................ என்பவரால் கண்டு பிடிக்கப்பட்ட அச்சுயந்திரம், (3) ........................ என்பவரால் உருவாக்கப்பட்ட நீராவி இயந்திரம், (4) ........................ என்பவரால் கண்டறியப்பட்ட மின் பிறப்பாக்கி என்பன கல்வி மறுமலர்ச்சிக்குக் காரணமாயின. 20 ஆம் நூற்றாண்டில் தொழில் நுட்ப விஞ்ஞான அபிவிருத்தி நன்கு முக்கியமான துறைகளில் ஏற்பட்டது (5) ........... (6) ............ (7) ................... (8) ................... என்பனவே அத்துறைகளாகும். (9) ........................ இயந்திரமும் தற்காலத்தில் பரவலாகப் பாவிக்கப்படுகின்றது.

2. சரியா பிழையா என்பதைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

1. பழைய இயந்திரங்களின் வினைத்திறன் கூடியதற்குக் காரணம் நெம்புகோல், கப்பி, சில்லும் அச்சாணியும், சாய்தளமும் ஆப்பும் முதலிய அடிப்படைப் பொறிகள் கண்டுபிடிக்கப் பட்டமையாகும். ..............................

2. எண்ணெயினால் இயங்கும் இயந்திரங்களின் பாவனைக்குப் பின்பே நீராவி இயந்திரங்கள் பாவனைக்கு வந்தன ............

3 ஒரு நாட்டின் மொத்தத் தேசிய வருமானத்தில் 25சதமேனும் கைத்தொழில் துறைமூலம் கிடைத்து, சனத்தொகையில் 10 சத வீதமேனும் கைத்தொழில் துறை வேலைகளில் ஈடுபட்டிருந்தால் அதனைக் கைத்தொழில் நாடென்று இனங்காணலாம். .. ............... ......

4. கைத்தொழில் நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் ஒன்றேனச் சூழல் மாசடைதலைக் கொள்ள முடியாது ..............

5. 'அ' என்ற அடைபினுள் குறிப்பிடப்பட்டுள்ள உபகரணங்கள் அல்லது நிகழ்வுகள் 'ஆ, என்ற அடைப்பினுள் குறிப்பிடப்பட்டுள்ள வருடத்துடன் பொருத்திப் பிழையின்றி மீண்டும் எழுதுக.

| (அ) | (ஆ) வருடம் |
|---|---|
| 1. அச்சு யந்திரம் | 1859 |
| 2. நீராவி தேர் பைன் | 1955 |
| 3. கனிப்பொருணைய் உபயோகம் | 1884 |
| 4. கணணி உபயோகம் | 1455 |

3. 'அ' என்ற அடைப்பினுள் தரப்பட்டுள்ளோரின் பெயர்களை 'ஆ' என்ற அடைப்பினுள் தரப்பட்டுள்ள பொருட்களுடன் பொருத்துக.

| (அ) | (ஆ) |
|---|---|
| 1. சேர் சாள்ஸ் பாசன் | அச்சு யந்திரம் |
| 2. யேம்ஸ் வாட் | தேர்பைன் |
| 3. கட்டன் பேக் | நீராவி யந்திரம் |

4, பின்வரும் உலகப் படத்தின் உதவியைக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக. இப்படத்திலுள்ள சதுரங்களுக்குப் பெயரிடுவதற்கு உச்சத்திலுள் எண்களும். இடது பக்கத்திலுள்ள ஆங்கில எழுத்துக் களும் பயன்படுத்தப்படவேண்டும். உலகத்திலுள்ள ஓர் எண்ணை இடது பக்கத்திலுள்ள ஓர் ஆங்கில எழுத்துடன் சேர்த்து வாசிப் பதன் மூலம் ஒரு சதுரம் சுட்டிக் காட்டப்படுகிறது. உதாரணமாக இலங்கை D 7 சதுரத்துள் உள்ளது.

எச் சதுரங்களுள் பின்வரும் கைத்தொழில் நாடுகள் அடங்குகின் றன?


(1) அமெரிக்கா ஐக்கிய நாடுகள்: ................

(2) ஐக்கிய இராச்சியம்: ....................

(3) யப்பான்:- ..................

(4) மேற்கு ஜேர்மனி:- ....................

(5) அவுஸ்திரேலியா:- ....................



5.

1. ஐக்கிய ராச்சியம் கைத்தொழிலில் அபிவிருத்தியடையக் காரணம்:
   (1) நிலக்கரியும் வட கடல் எண்ணெயும்
   (2) நீர் மின் வலுவும், நிலக்கரியும்
   (3) நீராவியும், நீர் மின் வலுவும்
   (4) மனித வலுவும், நீராவியும்

2. உலக இரும்பு உற்பத்தியில் அரைப் பங்கு உற்பத்தியாகும் நாடு:
   (1) அமெரிக்கா (2) ருஷ்ஷியா
   (3) இங்கிலாந்து (4) இந்தியா

3. உலகின் பிரதான கைத்தொழில் நாடுகளில் ஒன்று:
   (1) தாய்வான் (2) கொரியா
   (3) சிங்கப்பூர் (4) யப்பான்

4. தென் கொரியாவில் முக்கியத்துவம் பெறும் கைத்தொழில்கள்
   (1) இலகு கைத்தொழில், புடவைக் கைத்தொழில்
   (2) புடவைக் கைத்தொழில், மின்சாரப் பொருட்கள்
   (3) பிளாஸ்ரிக் பொருட்கள், றெடிமேட் ஆடைகள்
   (4) இலகுக் கைத்தொழில், மோட்டார் கைத்தொழில்

5. உலகில் முதன் முதலில் கைத்தொழில் மயமான நாடு:
   (1) அமெரிக்கா (2) யப்பான்
   (3) இங்கிலாந்து (4) ஜெர்மனி

6. போக்கு வரத்திற்கு கனிப் பொருள் எண்ணெய் 1859 இன் பின் பயன்படுத்துவதற்கு முன்னர் பயன்படுத்திய எரி பொருள்:
   (1) நீர் மின் (2) வாயு (3) நிலக்கரி (4) மனித உழைப்பு

7. தொழினுட்பத் துறையில் பாரிய மாற்றம் ஏற்பட்டகாலம்:
   (1) 20ம் நூற்றாண்டு (2) 17ம் நூற்றாண்டு
   (3) 18ம் நூற்றாண்டு (4) 19ம் நூற்றாண்டு

## பகுதி II

1. 20 நூற்றாண்டில் தொழினுட்ப விஞ்ஞான அபிவிருத்தி ஏற்பட்ட 4 துறைகள் எவை?

2. தொழினுட்ப விருத்தியினால் ஏற்பட்டுள்ள நன்மை. தீமைகள் எவை?

3. பொருத்தமான தொழினுட்பமென்றால் என்ன?

4. தொழில் னுட்பத்துறை மீதும் கைத்தொழில் மீதும் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை?

5. உலகில் யப்பான் முதலிடம் வகிக்கும் கைத்தொழில்கள் எவை?

## வினாத்தாள்: 6

# மனித செயற்பாடுகளும் உலகின் பல்வேறு பிரதேசங்களும்

## பகுதி I

1. இந்தியா, மாலைதீவு, பாகிஸ்தான் என்பன:
   (1) தென்கிழக்கு ஆகிய நாடுகள் (2) தென்னாசிய நாடுகள்
   (3) மத்திய கிழக்கு நாடுகள் (4) கிழக்காசிய நாடுகள்

2. ஆங்கில அமெரிக்கா என்பது,
   (1) மெச்சிக்கோவையும் ஐக்கிய அமெரிக்காவையும்
   (2) லத்தீன் அமெரிக்காவையும் கனடாவையும்
   (3) கனடாவையும் ஐக்கிய அமெரிக்காவையும்
   (4) யப்பானையும் அமெரிக்காவையும்

3. தென்னாசிய பிரதேசத்திலுள்ள நாடுகளுள் பெரும் பாலானவை ஒரு காலத்தில்:
   (1) அபிவிருத்தியடையாத நாடுகள்
   (2) குடியேற்ற நாடுகளாக இருந்தவை
   (3) பிரித்தானிய பழக்க வழக்கங்களைப் பின்பற்றியவை
   (4) இந்திய ஆதிக்கத்திற்குட்பட்டவை.

4. 1981 இல் தென்னாசியாவில் காணப்படும் பொதுப் பிரச்சினைகளைத் தீர்க்க உருவாக்கிய அமைப்பு:
   (1) சார்க் அமையல்
   (2) அணிசேரா நாடுகளின் அமையல்:
   (3) பொது நல வாயம்
   (4) ஐக்கிய நாடுகள் அமையம்

5. யப்பானும் அயல் நாடுகளும் என்ற பிரிவில் அடங்கும் நாடுகள்:
   (1) யப்பான், சீனா, தாய்வான், கொரியா
   (2) யப்பான், வடகொரியா, கொங்கோங், சீனா
   (3) யப்பான், தாய்வான், கொங்கோங், பர்மா
   (4) யப்பான், தென்கொரியா, தாய் வான், கொங்கோங்

6. சீனாவின் துயர் என அழைக்கப்படுவது:
   (1) குவாங்கோ நதி (2) நைல் நதி
   (3) யாங்கிசிக்கியாங் (4) சிக்கியாங்

7. உலகின் விளையாட்டு மைதானம் என்றழைக்கப்படுவது;
   (1) சுவிஸ்லாந்து (2) அயர்லாந்து
   (3) ஆஸ்திரியா (4) சுவீடன்

8. 'அ' — தென்னாபிரிக்க நாடுகள், 'ஆ' — மத்திய கிழக்குநாடுகள் 'இ' — இலத்தீன் அமெரிக்கா நாடுகள்.
   கீழே தரப்பட்டுள்ள நாடுகளின் முன்னால் 'அ', 'ஆ', 'இ', என்பவற்றை எழுதி, அவற்றைப் பிரதேச அடிப்படையில் வகைப்படுத்துக.

| நாடுகள் | பிரதேசம் (அ / ஆ / இ) |
|---|---|
| 1. இலங்கை ...... | ............... |
| 2. ஈரான் ..... | ............... |
| 3. வங்கான தேசம் ..... | ............... |
| 4. மெக்சிக்கோ ...... | ............... |
| 5. சிரியா ...... | ............... |
| 6. குவைத் ...... | ............... |
| 7. துருக்கி ...... | ............... |
| 8. மாலைதீவு ...... | ............... |
| 9. ஆசெந்தீனா ...... | ............... |
| 10. இந்தியா ..... | ............... |

9. சரியா பிழையா என வசனத்தின் இறுதியில் எதுக.
   இஸ்லாமிய நாகரிகமும் வறள் கால நிலையும் கொண்டவை தென் ஆசிய நாடுகளாகும்.
   மேற்கு ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் முதலாளித்துவ, பொருளாதார முறையே காணப்படுகின்றது.

## பகுதி II

1. ஈ. பி. கோல் என்பவர் உலகை எத்தனையாகப் பிரித்துள்ளார்? அவை எவை?
2. தென்னாசியாவினுள் அடங்கும் நாடுகள் எவை?
3. ஆபிரிக்காவில் வாழும் இனத்தவர்கள் யாவர்?
4. மேற்கு ஐரோப்பிய நாடுகள் எவை?
5. சோவியத் ஒன்றியம் எத்தனை இராச்சியங்களாகப் பிரிந்தன அவை எவை?

## மாதிரி வினாத்தாள்: 1

# சமூகக்கல்வி

## பகுதி 1

(எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக)

1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4) என்று இலக்கமிடப்பட்டிருக்கும் விடைகளுள் சரியானது அல்லது மிகவும் பொருத்தமானது என நீர் கருதுவதனைத் தெரிவு செய்து. அதன் கீழ் கோடிடுக.

1. பௌதிகச் சூழல் என்பது:
   (1) மனிதனும் அவனது செயற்பாடுகளின் விளைவுகளும் ஆகும்.
   (2) தரைத்தோற்றம், காலநிலை, இயற்கைத்தாவரம், கனிப்பொருள் என்பனவற்றைக் குறிக்கும்.
   (3) பயிர்ச்செய்கை, கைத்தொழில், வர்த்தகம் என்பனவாகும்.
   (4) மலைகள், நதிகள், மழை, பயிர்கள், விலங்குகள் என்பனவாகும்.
2. கோடை வரட்சியும், மாரி குளிராகவும் 30°—40° அகலாங்குகளுக்கிடையில் அமைந்துள்ள காலநிலை வலயம்:
   1. அயன மண்டலக் காலநிலை 2. மத்தியதரைக் காலநிலை
   3. குளிர்ச்சியான இடைவெப்பச் சமுத்திரக் காலநிலை
   4. பருவக் காற்றுக் காலநிலை
3. மேட்டு நிலங்களின் தொகுதி வருமாறு.
   (1) வொல்கா, கங்கை, திபெத்
   (2) திபெத், பிறேசிலியன், மெசெற்றா

(3) காக்கசஸ், கயானா, ரஸ்ஸிலி

(4) பிரமபுத்திரா, மெசெற்றா, கயானா

4. வளிமண்டலத்தில் பெரும் பங்கினை வகிக்கும் முக்கியமான வாயுக்கள்:

(1) ஆகன், ஒசோன் (2) ஒக்சிசன், நியோன்

(3) நைட்ரஜன், ஆகன் (4) நைதரசன், ஒக்சிசன்

5. மத்திய கோட்டுப் பகுதிகளில் வெப்பநிலை உயர்வாக இருப்பதற்குக் காரணமல்லாதது.

(1) சூரிய கதிர்கள் செங்குத்தாக வீழ்வது.

(2) சூரிய கதிர்கள் சூடாக்கும் பரப்பளவு குறைவாக இருப்பது.

(3) சூரிய கதிர்கள் செங்குத்தாக வீழ்வதால், நிலம் கூடிய வெப்பத்தை உறிஞ்சிக் கொள்வது.

(4) சூரிய கதிர்கள் ஊடறுக்கும் வளி மண்டலத்தின் தடிப்பளவு

6. அமேசன் - கொங்கோப் பிரதேசங்களில் காணப்படும் காலநிலை வகை:

(1) அயனமண்டலக் காலநிலை

(2) மத்திய கோட்டுக் காலநிலை

(3) பருவக்காற்று காலநிலை

(4) இடைவெப்பக் கண்டக் காலநிலை

7. வெப்பவலயக் காட்டு மரங்கள்:

(1) ஒக், எழும், மாபிள்

(2) பீச், பேர்ச், மைன்

(3) ஸ்புறூச், லார்ச், தேவதாரு

(4) மலைவேம்பு, கருங்காலி, தேக்கு

8. ஆட்டிக், அந்தாட்டிக் பிரதேசங்களில் காணப்படும் தாவரம்:

(1) தண்ட்ரா (2) நாகதாளி

(3) புற்கள் (4) பற்றைக் காடுகள்

9. இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம் எனும் நாடுகளின் தலை நகர்கள் முறையே:

(1) டெல்கி, கராச்சி, திம்பு

(2) பம்பாய், கரைச்சி, காட்டுமண்டு

(3) புதுடெல்கி, இஸ்லாமாபாத், டக்கா

(4) டெல்கி, டக்கா, கரைச்சி

10. பபிலோனிய நாகரிகம் வளர்ந்த நதிவடி நிலம்:

(1) யூப்பிரட்டீஸ் ரைகிறீஸ் நதி (2) இந்து நதி

(3) யாங்கிசிக்கியாங் நதி (4) நைல் நதி

11. ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்கக் கமக்காரரின் மிகக்கடுமை யான வறுமைக்குப் பிரதான காரணம்.

(1) அவர்கள் பயிர் செய்யும் நிலம் பெரும்பாலும் வளமற்றதா யிருத்தலாகும்,

(2) மத்திய கோட்டிற்கு அண்மையிலுள்ள பிரதேசங்களில் வரட்சிக் காலங்கள் அடிக்கடி ஏற்படுதலாகும்.

(3) அவர்கள் விவசாயத்திற்குப் பாரம்பரியமான முறைகளைத் தொடர்ந்து கையாளுதலாகும்.

(4) அவர்கள் தமது ஏற்றுமதிப் பொருள்களுக்கு நியாயமான விலையைப் பெறாமையாகும்.

12. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளைக் குறிக்கும் சரியான தொகுதி:

(1) பிரித்தானியா, பிரான்ஸ், சுவீடன், டென்மார்க்

(2) சவூதி அராபியா, ஈரான், குவைத், இத்தாலி

(4) இந்தியா, இலங்கை, நைஜீரியா. உகண்டா

(4) ஈராக், ஈரான், ஜப்பான், நியூசிலாந்து

13. நாடுகளின் வாழ்க்கை நிலையை மதிப்பிடும் வகையில் அமைந்த ஒரு அளவுகோல்:

(1) மொத்தத் தேசிய உற்பத்தி (2) ஆள்வீத வருமானம்

(3) வாழ்க்கைச் செலவுச் சுட்டி (4) வர்த்தக நிலுவை

14. புவியின் மேற்பரப்பில் நிலப் பரப்பு:

(1) 71% (2) 39% (3) 29% (4) 50%

15. அச்சியந்திரத்தைக் கண்டமைத்தவர்:

(1) யேம்ஸ் வாட் (2) சேர் சாள்ஸ் பாசன்

(4) கட்டன் பேக் (4) மில்லர்

16. சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள நாடு:

(1) பிலிப்பைன் (2) மெக்சிக்கோ

(3) தாய்வான் (4) இந்தியா

17. இஸ்லாமிய கலாச்சாரமும் வறள் காலநிலையும் கொண்ட நாடுகள்

(1) தென் ஆசிய நாடுகள்

(2) மத்திய கிழக்கு நாடுகள்

(3) இலத்தீன் அமெரிக்க நாடுகள்

(4) தென் கிழக்கு ஆசிய நாடுகள்

18. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுள் நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தப்படும் நாடு:

(1) சீனா (2) இந்தியா

(3) தாய்வான் (4) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

தரப்பட்டுள்ள ஐரோப்பாப் படத்தில் குறித்துள்ளவற்றை அவதானித்து 19 முதல் 23 வரையிலான வினாக்களுக்கு விடை தருக.



19. இங்கே கொடுக்கப்பட்டுள்ள ஐரோப்பாப் படத்தில்; B, A, C, D என்ற நான்கு நகரங்களும்:
(1) லண்டன், பாரீஸ், ஜெனிவா, பெர்லின் ஆகும்.
(2) லண்டன், பெர்லின், ஜெனிவா, ரோம் ஆகும்.
(3) லண்டன், மட்ரிட், பாரீஸ், ஒஸ்லோ ஆகும்.
(4) லண்டன், ஜெனிவா, பிரசெல்ஸ், வியன்னா ஆகும்.

20. அதே படத்தில் (i), (ii), (iii), (iv) எனக் குறிக்கப்பட்டுள்ள நான்கு கடல்களும்:
(1) வடகடல், கஸ்பியன்கடல், கருங்கடல், ஏரல்கடல்
(2) வடகடல், மத்தியதரைக்கடல், கருங்கடல், கஸ்பியன்கடல்
(3) வடகடல், கருங்கடல், ஏரல்கடல், கஸ்பியன்கடல்
(4) வடகடல், பால்டிக்கடல், ஏரக்கடல், கருங்கடல்

21. அதே படத்தில் X என்ற மலைத்தொடரும் Y என்ற நதியும்:
(1) அல்ப்ஸ் மலையும், றைன் நதியும்
(2) காப்பேதியன் மலையும், டினீஸ்ரர் நதியும்
(3) யூறல் மலையும், வொல்கா நதியும்
(4) பிறினிஸ் மலையும், கறோன் நதியும்

22. அதே படத்தில் 1 என இலக்கம் குறிக்கும் நாடு:
(1) பிரான்ஸ் (2) போத்துக்கல்
(3) பிரித்தானியா (4) ஸ்பெயின்

23. அதே படத்தில் அ, ஆ, இ என்ற தீவுகள் முறையே:
(1) கிறீன்லாந்து, அயர்லாந்து, சிசிலி
(2) ஐஸ்லாந்து, அயர்லாந்து, சிசிலி
(3) ஐஸ்லாந்து, பிரித்தானியா, கோசிக்கா
(4) கிறீன்லாந்து, அயர்லாந்து, கோசிக்கா

பின்வரும் அட்டவணையை அவதானித்த, அதன் கீழ்வரும் 31 - 35 வரையிலான வினாக்களுக்கு விடை தருக.

| நாடு | தேசிய வருமானத்தில் கைத்தொழில் மூலம் கிடைப்பது | சனத் தொகையில் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளோர் |
|---|---|---|
| A | 35% | 16% |
| B | 14% | 06% |
| C | 29% | 12% |
| D | 06% | 04% |

24. கைத்தொழில் நாடுகள் எனக் கொள்ளக் கூடியவை.
(1) AB (2) BC (3) AC (4) CD

25. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளாகக் கொள்ளக்கூடியவை.
(1) AC (2) DB (3) BD (4) AC

26. D என்பது எத்தகைய நாடாக இருக்கலாம்?
(1) கைத்தொழில் நாடு (2) உயர்வளம் மிக்க நாடு
(3) விவசாய நாடு (4) வளங்குன்றிய நாடு

27. C நாட்டிற்கு பின்வரும் தொகுதியில் எது பொருத்தமானது?
(1) இந்தியா (2) ஐக்கிய அமெரிக்கா
(3) யப்பான் (4) இலங்கை

28. உயர் தொழில்நுட்பம் கொண்ட மக்களைக் கொண்ட நாடு:
(1) —A (2) —B (3) —C (4) —D

29. சார்க் நாடுகளாவன;
(1) யப்பான், சீனா, தாய்வான், பர்மா
(2) சிங்கப்பூர், இந்தோனேசியா, பர்மா, தாய்லாந்து, பிலிப்பைன்.
(3) இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், வங்களாதேசம், பூட்டான், நேபாளம்
(4) அப்கானிஸ்தான், பாகிஸ்தான், ஈரான், ஈராக், சவூதி அரேபியா

30. பின்வரும் அட்டவணையை அவதானித்து 'அ' பகுதியிலுள்ளதை 'ஆ' பகுதியிலுள்ளதோடு பொருத்தி விடை தருக.

| (அ) | (ஆ) |
|---|---|
| இமயமலை | 1. தென்னாபிரிக்கா |
| தங்கம் | 2. இந்தியா |
| சர்வதேச பயிர் ஆராய்ச்சி நிலையம் | 3. ஈராக் |
| மத்திய கிழக்கு நாடு | 4. எவரெஸ்ட் |

# பகுதி 2

1. பின்வரும் பந்தியிலுள்ள இடைவெளிகளைப் பொருத்தமான விடை எழுதி நிரப்புக.

கண்டங்களுள் பரப்பில் பெரியது (1) ........................ ஆகும். (2) .................. மலைத்தொடர் இக்கண்டத்திலுள்ளது. 8848 மீற்றர் உயரமான (3) ..................... சிகரம் இதிலமைந்துள்ளது. இம் மலையிலிருந்து (4) ..................... நதி, (5) .....................நதி என்பன ஊற்றெடுத்துப் பாய்கின்றன இக்கண்டத்தின் தென்கண்ட நாடுகளில் (6) ..................... முதன்மையானது. இது (7) ........ சமுத்திரத்தில் (8) ................ கடலுக்கும், (9) ...................... விரிகுடாவிற்கும் இடையிலுள்ளது. இந்த நாட்டையும் இலங்கையையும் (10) ..................... நீரிணை என்ற ஓர் ஒடுக்கிய கடல் பிரிக்கிறது.

2. (i) மத்திய கோட்டுப் பிரதேசத்தில் வெப்பநிலை அதிகமாயும் முனைவுகளை நோக்கி செல்ல படிப்படியாகக் குறைவதற்கும் காரணங்கள் யாவை?

(ii) குத்துயரத்திற்கு ஏற்ப வெப்பநிலை எவ்வாறு வேறுபடுகிறது?

3. தரப்பட்டுள்ள உலகப் புற உருவப் படத்தில் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

(அ) அந்தமான் தீவுகள், ஆங்கிலக் கால்வாய், மஞ்சட்கடல், வடகடல், கிறீன்விச் நெடுங்கோடு.

(ஆ) பெரிய ஏரிகள், (பேரேரி) பியானீஸ் மலை, சிக்கியாங் ஆறு, சோவியற் கருமண் பிரதேசம், (உக்கிறேன்) திபெத் மேட்டு நிலம்.

(இ) கொழும்பிலிருந்து தோக்கியோ (டோக்கியோ) வுக்குச் செல்லும் கடற் பாதையும் அதன் முனைகளுக்கு இடையிள்ள இரண்டு தரிப்பிடங்களும்.

4. (i) ஏழு கண்டங்கள் யாவை?

(ii) அமெரிக்காவையும் ஆசியாவையும் பிரிக்கும் ஒடுங்கிய கடற் பரப்பு யாது?

(iii) வட — தென் அமெரிக்காக்களையும், ஐரோப்பா - ஆபிரிக்காவையும் இணைக்கும் சமுத்திரம் யாது?



(iv) நான்கு பக்கங்களும் நீரால் சூழப்பட்ட தனித்த கண்டம் யாது?

(v) தென்னாபிரிக்காவின் மிக நீண்ட நதி யாது?

5. மனித நடவடிக்கைகளின் மீது கால நிலையின் செல்வாக்குக் குறித்து மூன்று வாக்கியங்கள் தருக.

6. (i) விவசாயநாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மூன்றினைக் கூறுக.

(ii) கைத்தொழில் நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மூன்றினைக் கூறுக.

## மாதிரி வினாத்தாள்: 7

# சர்வதேச வர்த்தகம்

## பகுதி 1

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் தரப்பட்டிருக்கும் விடைகளுக்குள் சரியானதைத் தெரிவு செய்க.

1. உலகில் எந்த ஒரு நாடும் அதற்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் உற்பத்தி செய்து கொள்ள முடியாது. ஏனெனில்

(1) உலகின் எல்லாப் பகுதிகளிலும் ஒரேவிதமான பௌதிகச் சூழல் காணப்படுவதில்லை

(2) இயற்கை வளங்களும் சமமாகப் பரவியில்லை

(3) மனித செயற்பாடுகள் வேறுபடுகின்றன

(4) இக்காரணிகள் அனைத்தும்

2. வர்த்தக மீதி சாதகமாயிருக்கும்போது.

(1) ஒரு நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி அதிகரிக்கும்

(2) ஏற்றுமதி செய்யும் பொருட்களின் பெறுமதி அதிகரிக்கும்

(3) உள்நாட்டு வர்த்தகம் அதிகரிக்கும்

(4) தேசிய வருமானம் அதிகரிக்கும்

3. பல்பக்க வியாபாரம் எனப்படுவது:
(1) இரு நாடுகள் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளும் வியாபாரம்
(2) ஒரு நாடு சுதந்திரமாக ஈடுபடும் வியாபாரம்
(3) இரண்டுக்கு மேற்பட்ட நாடுகள் ஒன்று சேர்ந்து மேற்கொள்ளும் வியாபாரம்
(4) உலகின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் வியாபாரம்.

4. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பழக்கத்திலுள்ள நாணயம்:
(1) கடின பணம் (2) மென் நாணயம்
(3) அமெரிக்க டொலர் (4) ஸ்ரேலிஸ் பவுண்

5. 'அ' பகுதியிலுள்ள நாணய வகைகள் இரண்டிற்குமுரிய நாணயங்களை 'ஆ' பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கவும்.

| (அ) வகை | (ஆ) நாணயம் |
|---|---|
| 1. கடின பணம் | ரூபா |
| | டொலர் |
| | றியாஸ் |
| 2. மென்நாணயம் | ஸ்ரேலிங் பவுண் |
| | டொய்ஸ் மார்க் |
| | யென் |

6. 'அ' பகுதியிலுள்ள வர்த்தகப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளை 'ஆ' பகுதியிலிருந்து தேர்ந்தெடுத்து எழுதுக். உ+ம் கோதுமை — ஆசெந்தீனா.

| 'அ' பகுதி | | 'ஆ' பகுதி |
|---|---|---|
| 1. பெற்றோலியம் | — | ஆசெந்தீனா |
| 2. மோட்டார் வண்டி | — | இலங்கை |
| 3. கோதுமை | — | சுவீடன் |
| 4. தேயிலை | — | சவூதி அரேபியா |
| 5. இரும்புத்தாது | — | யப்பான் |
| 6. வைரம் | — | தென்னாபிரிக்கா |
| 7. தகரம் | — | சிங்கப்பூர் |
| 8. உடுதுணி | — | இந்தியா |
| 9. சீனி | — | மலேசியா |
| 10. றப்பர் | — | கியூபா |

7. பின்வரும் வாக்கியம் சரியா பிழையா எனக் கூறுக.
உற்பத்தி செய்துகொள்ள முடியுமாயினும் அப்பொருளை இறக்கு மதி செய்வது சில நாடுகளில் உற்பத்தி செய்வதைவிட இலாப கரமானதாக இருக்கும். ........................

பின்வரும் பந்தியிலுள்ள இடைவெளிகளைப் பொருத்தமான விடைகளை எழுதி நிரப்புக.

சர்வதேச வர்த்தகம் இருவகைப்படும். ஒன்று (1) .................... மற்றது (2) ........................ எனப்படும். சர்வதேச வர்த்தகத்தில் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்படும் நாணயம் அமெரிக்காவின் (3) ...................... ஆகும். அத்தோடு யப்பானின் (4) ................ ஜேர்மனியின் (5) ... .... ........... என்பனவும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஒரு நாட்டின் பண அலகை, மற்றொரு நாட்டின் பண அலகாக மாற்றும் விகிதமுறையை (6) ...................... ... என்பர். ஏற்றுமதி வருமானத்திற்கும் இறக்குமதிச் செலவிற்கும் இடையிலான வித்தியாசத்தை (7) ...................... என்பர். (8) .............. ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களின் விலைகளினால் நிர்ணயிக்கப்படுகின்றது. சர்வதேச வர்த்தகத்தில் ஏற்றுமதி மூலம் பெறும் (9) .................... யில் பெரும்பகுதியை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் கடனுக்காகவும் வட்டிக்காகவும் இழக்கின்றன.

10. அமெரிக்காவுக்கு டொலர் போல, இத்தாலிக்கு எது? ..........

11. பின்வரும் பொருட்களில் எவை முதனிலைப் பொருட்கள் (மூலப் பொருட்கள்). எவை முடிவுப் பொருட்கள் (உற்பத்திப் பொருட்கள்) என எழுதுக.

தேயிலை, செம்பு, மோட்டார் கார் கொக்கோ, இழுபொறி புடவை, வாழைப்பழம், நிலக்கரி.

| முதனிலைப் பொருட்கள் | முடிவுப் பொருட்கள் |
|---|---|
| ........................ | ........................ |
| ........................ | ........................ |
| ........................ | ........................ |
| ........................ | ........................ |
| ........................ | ........................ |

12. முடிவுப் பொருட்களின் விலை உயர்வது போல, முதனிலைப் பொருட்களின் விலை அதிகம் அதிகரிப்பதில்லை என்பது சரியா?
..........................

பின்வரும் அட்டவணையை அவதானிக்க:

| | A | | B |
|---|---|---|---|
| ஆண்டு | இறக்குமதி (மில் ரூபாவில்) | ஏற்றுமதி | இலங்கை ரூபாவின் அமெரிக்க டொலர் பெறுமதி |
| 1982 | 41946 | 21454 | 23 . 10 |
| 1983 | 45558 | 25096 | 28 . 91 |

வர்த்தக மீதியை மேலுள்ள அட்டவணையின் A பகுதியிலிருந்தா B பகுதியிலிருந்தா கணிக்கலாம்? ..............

நாணய மாற்று வீதமென A பகுதியையா B பகுதியையா கொள்ளலாம்? ....................

1982 ஆம் ஆண்டின் இறக்குமதி 41946 மில் ரூபாவாகும் இதனை டொலரில் காண்பதற்கு யாது செய்ய வேண்டும்?
........................

## பகுதி 2

1. சர்வதேச வியாபாரத்தில் இலங்கை அடைந்த நன்மைகள் எவை? தீமைகள் எவை?
2. இருபக்க வியாபாரம், பல்பக்க வியாபாரம் என்பவற்றை விளக்குக.
3. வர்த்தக மீதி என்றால் என்ன?
4. சர்வதேச வியாபாரம் சம்பந்தமான பிரச்சினைகள் எவை?
5. வர்த்தக விகிதம் என்றால் என்ன?

வினாத்தாள்: 8

# உலக நாடுகள் ஒன்றிலொன்று தங்கியிருத்தல்

## பகுதி 1

பின்வரும் வினாக்களுக்கான விடைகளுள் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

1. எந்த ஒரு நாடும் தனித்து வாழ முடியாதுள்ளமைக்குக் காரணம்.
   (1) உலக நாடுகள் ஒன்றுடன் ஒன்று மிக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருத்தல்.
   (2) எந்த ஒரு நாடும் தனக்குத் தேவையான சகல பொருட்களிலும் தன்னிறைவு அடையாமை.
   (3) இன, மத, மொழியால் நாடுகள் பிணைக்கப்பட்டிருந்தல்.
   (4) சர்வதேச வர்த்தகம்.

2. நாடுகளின் தன்னிறைவு சிதைந்து நாடுகளிடையே தொடர்புகள் விரிவடையக் காரணம்:
   (1) நாடுகளின் அபிவிருத்தி, சனத்தொகை வளர்ச்சி
   (2) சனத்தொகை அபிவிருத்தி, பொருட்களின் உற்பத்திப் பெருக்கம்.
   (3) குடியேற்ற வாதம், கைத்தொழில் புரட்சி.
   (4) கைத்தொழில் புரட்சி, நாடுகாண் பயணங்கள்.

3. 16ம் 17ம் நூற்றாண்டுகளில் பேரரசுகளைக் கட்டி யெழுப்பிய ஐரோப்பிய நாடுகள்;
   (1) பிரித்தானியா, பிரான்ஸ், ஸ்பானியா, போர்த்துக்கல், ஒல்லாந்து.
   (2) அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், ஒல்லாந்து, போர்த்துக்கல்
   (3) பிரிந்தானியா, பிரான்ஸ், போர்த்துக்கல், அமெரிக்கா ரஷ்ஷியா
   (4) பிரித்தானியா, ஒல்லாந்து, ரஷ்ஷியா, அமெரிக்கா, ஸ்பெயின்.

4. உலக நாடுகள் ஒன்றிலொன்று தங்கியிருக்கக் காரணம்:
   (1) பெற்றோலியப், பொருட்களும் மூலதனமும்
   (2) ஏற்றுமதியும், இறக்குமதியும்
   (3) கைத்தொழில் அறிவும், தொழினுட்ப அறிவும்
   (4) மூலதனமும், கைத்தொழில் அறிவும்

5. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகளிடமிருந்து பெற்றுக் கொள்பவை:
   (1) தொழினுட்ப அறிவு, சிக்கார்ந்த இயந்திரசாதனங்கள், மூலதனப் பொருட்கள்.
   (2) மூலப் பொருட்கள், மூலதனம், கைத்தொழில் அறிவு
   (3) தொழினுட்ப அறிவு, கனிய எண்ணெய், இயந்திரங்கள்
   (4) கைத்தொழில் அறிவு, உற்பத்திப் பொருட்கள், உணவுப் பொருட்கள்

6. பின்வரும் நாடுகளில் கிழக்கு நாடுகள் எவை மேற்கு நாடுகள் எவை என அட்டவணையில் எழுதுக. அ - கிழக்கு நாடுகள். ஆ - மேற்கு நாடுகள்.

| நாடுகள் | | அ அல்லது ஆ |
|---|---|---|
| (1) இந்தியா | — | .................................... |
| (2) கிரேக்கம் | — | .................................... |
| (3) உரோமபுரி | — | .................................... |
| (4) எகிப்து | — | .................................... |
| (5) சீனா | — | .................................... |
| (6) பர்மா | — | .................................... |
| (7) இலங்கை | — | .................................... |
| (8) பிரித்தானியா | — | .................................... |
| (9) போர்த்துக்கல் | — | .................................... |

7. பின்வரும் வாக்கியங்கள் சரியா, பிழையா என்பதை வாக்கியத்தின் இறுதியிலுள்ள கோட்டில் எழுதுக,
   (1) ஓரளவு தன்னிறைவு பெற்றிருந்த சிறிய சமுதாயங்களிலே வாழ்ந்த அக்கால மக்கள், பண்டமாற்று முறையின் மூலம் தமது சொற்ப தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டனர். ........................

(2) உலக மக்களிடையில் அந்நியோன்னியத் தொடர்புகளை சர்வதேச வர்த்தகம் ஏற்படுத்தத் தவறிவிட்டது. ............

(3) கைத்தொழிற் புரட்சியினால் உற்பத்தித்துறை பாதிப்படைந்தது. ......................

8. 'அ' பிரிவிலுள்ள நாடுகளும் 'ஆ' பிரிவிலுள்ள நாடுகளும் ஒன்றிலொன்று தங்கியிருக்கின்றன காரணத்தோடு அவற்றைத் தொடர்புபடுத்துக. உ+ம் அவுஸ்ரேலியாக் கோதுமை+இலங்கைப் பிரீமா ஆலை: மாவரைத்தல் - தொழில்.

| (அ) | | (ஆ) |
|---|---|---|
| (1) ஜேர்மனி நிலக்கரி | — | (1) யப்பானிய மோட்டார் வண்டிகள் |
| (2) சவூதி அரேபியாப் பெற்றோலியம் | — | (2) இலங்கை பிரீமா ஆலை |
| (3) அவுஸ்திரேலியக் கோதுமை | — | (3) சுவீடன் இரும்புத்தாது |
| (4) யப்பானிய துணிவகை | — | (4) ஐக்கிய இராச்சிய ரயர் |
| (5) இலங்கை றப்பர் | — | (5) சிங்கப்பூர் ஆடையுற்பத்தி |

9. பின்வரும் பந்தியிலிள்ள இடைவெளிகளைப் பொருத்தமான விடைகளை எழுதி நிரப்புக.

நாடுகாண் பயணங்களில் (1) ................ னும் (2) .............. உம் முன்னோடிகளாகத் திகழ்ந்தன. பிரித்தானியாவில் ஆரம்பித்து ஐரோப்பாவிற் பரவிய (3) ........................ காரணமாகக் கைத்தொழிற்றுறை விருத்தியடைந்தது. அதனால் அபிவிருத்தியடைந்த நாடுகள் பொருளாதார மட்டத்தில் உயர்ந்தன அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பொருளாதார மட்டத்தில் (4) ........................ அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பெரும்பாலும் (5) .............. நாடுகளாகும். இவை (6) .................... ப் பொருட்களையும் (7) .................... பொருட்களையும் பெரும்பாலும் ஏற்றுமதி செய்து வருகின்றன. அதேவேளை அபிவிருத்தியடைந்த நாடுகள் (8) ........... பொருட்களை ஏற்றுமதி செய்து வருகின்றன. நாடுகளிடையே இன்று ஏற்பட்டுள்ள அன்னியோன்ய உறவுகளுக்கு (9) ...................... முறைகளின் துரித வளர்ச்சியும் காரணமாகும்.

## வினாத்தாள்: 9

# ஆட்சி முறை

## பகுதி 1

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் தரப்பட்டிருக்கும் விடைகளுள் சரியானதைத் தெரிவு செய்க.

1. குடியாட்சி நிலவும் நாட்டில் அரசாங்கம் மக்களை:
   (1) தான் விரும்பிய தொழிலைச் செய்யும்படி கட்டுப்படுத்தலாம்
   (2) தாம் விரும்பியவர்களுக்கு அரசாங்க உத்தியோகங்களை அளிக்கலாம்
   (3) குலத்தொழிலைச் செய்யும்படி கட்டளையிடலாம்
   (4) ஒருவனது கல்வித் தகைமைக்கேற்றதும், அவன் விரும்பியதுமான தொழிலைச் செய்ய உரிமையளிக்கலாம்.

2. வாக்குரிமையுடைய ஒவ்வொருவரும் ஆட்சியைச் சிறப்பாக கொண்டு நடத்தக்கூடிய ஆற்றல் வாய்ந்த ஒருவனைத் தேர்தலின்போது தேர்ந்தெடுப்பதற்கு:
   (1) கடமையுடையவன்
   (2) கட்டாயப்படுத்தப்படுகிறான்
   (3) ஆதரவாளர்களால் தூண்டப்படுகின்றான்
   (4) உரிமையுடையவன்

3. குடியாட்சி முறைப்படி எமது நாடு ஆளப்படுகின்றது என்று எண்ணுவதற்கு ஏதுவான காரணி:
   (1) ஜனாதிபதி ஆட்சிமுறை நிலவுவது
   (2) பாராளுமன்றம் ஆட்சியைக் கொண்டு நடத்துவது
   (3) மந்திரி சபையால் வரவு செலவு திட்டம் தயாரிக்கப்படுதல்
   (4) சர்வசன வாக்குரிமை மூலம் தாம் விரும்பிய அரசாங்கத்தைத் தெரிவு செய்யும் வாய்ப்பினை மக்களுக்கு அளித்திருத்தல்

4. பண்டைய கிரேக்கத்தில் நிலவிய ஆட்சிமுறை:
(1) முடியாட்சி (2) குடியாட்சி
(3) சர்வாதிகார ஆட்சி (4) மக்களாட்சி

5. கி. பி. 1789 இல் மனித உரிமை பிரகடனப் படுத்தப்பட்ட நாடு:
(1) அமெரிக்கா (2) ரஷ்ஷியா
(3) பிரான்ஸ் (4) பிரித்தானியா

6. சர்வசன வாக்குரிமை பயன்படுத்தப்படாத ஆட்சி முறை:
(1) முடியாட்சி (2) ஜனாதிபதியாட்சி
(3) சர்வாதிகார ஆட்சி (4) மக்களா ஆட்சி

7. 'அ' பகுதியிலுள்ள நாடுகளில் நிலவும் ஆட்சிமுறை யாதென 'ஆ' பகுதியில் எழுதுக.

| 'அ' — பகுதி | 'ஆ' — பகுதி |
|---|---|
| (1) இலங்கை | ...................................... |
| (2) நேபாளம் | ...................................... |
| (3) பாகிஸ்தான் | ...................................... |
| (4) இந்தியா | ...................................... |
| (5) ஐக்கிய இராச்சியம் | ...................................... |
| (6) ஐக்கிய அமெரிக்கா | ...................................... |

8. பின்வரும் பகுதியிலுள்ள இடைவெளிகளைப் பொருத்தமான விடைகளை எழுதி நிரப்புக.

மக்களால் மக்களுக்கான ஆட்சிமுறை (1) .............................. என்பர். இந்த ஆட்சி முறையில் மக்களுக்கு (2) .............................. (3) ....... ............... என்பன அளிக்கப்படுகின்றன. குடியாட்சிமுறையில் மக்கள் அனுபவிக்கும் (4) ................... சுதந்திரம் (5) ............ சுதந்திரம் (6) ...................... சுதந்திரம் என்பன முதன்மையானவை குடியாட்சிக்கு முற்றிலும் எதிரான ஆட்சிமுறை (7) .................... ஆகும். இன்றும் உலகின் பல நாடுகளில் (8) ......................... நிலவுகிறது. ஒரு மத்திய அரசாங்கத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஆட்சிமுறை (9) ......................... எனப்படும். அதுவே இலங்கையிலின்று நிலவுகிறது.

## பகுதி 2

1. ஆட்சிமுறை பற்றிய தத்துவங்களை எடுத்துக் கூறிய சிந்தனையாளர்கள் 5 பேரின் பெயர் தருக:
2. உலகில் நிலவும் ஆட்சிமுறைகள் எவை?
3. குடியாட்சி பற்றி அறிஞர்களின் கூற்றுக்கள் எவை.
4. ஒரு நாட்டு மக்களுக்கிருக்க வேண்டிய முக்கிய சுதந்திரங்கள் எவை?
5. சர்வாதிகார ஆட்சி நிலவிய நாடுகள் எவை? ஆட்சி செய்தவர்களின் பெயரையும் எழுதுக.
6. ஒற்றையாட்சியும் கூட்டாட்சியும் பற்றி விளக்குக.
7. கூட்டாட்சிமுறை ஒற்றையாட்சி முறையிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?
8. கூட்டாட்சி முறை காணப்படும் நாடுகள் எவை?

## வினாத்தாள்: 10

# உலக உணவுப் பிரச்சினை

## பகுதி 1

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் தரப்பட்டிருக்கும் விடைகளுள் சரியானதைத் தெரிவு செய்க.

1. உலக உணவு நெருக்கடிக்குக் காரணமல்லாதது
   (1) அதிகரித்துவிட்ட குடித்தொகை
   (2) உணவுப் பொருட்கள் சரிவரப் பங்கீடு செய்யப்பட்டாமை
   (3) உணவு ஒதுக்கமும், வறட்சி, பூச்சி, பீடைகளால் ஏற்படும் உணவுப் பொருட்களின் அழிவும்
   (4) குடும்பக் கட்டுப்பாடுகளால் சனத் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தாமை

2. உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்குரிய வழிவகை அல்லாதது
   (1) உண்ணும் உணவின் கலோரியளவைக் குறைத்தல்
   (2) விளை நிலப்பரப்பை அதிகரித்தல்

(3) ஏக்கருக்குரிய விளைச்சலை அதிகரித்தல்

(4) புதிய உணவு வகைகளை விருத்தி செய்தல்

3. ஆசிய, ஆபிரிக்க, லத்தின் அமெரிக்கக் கமக்காரரின் மிகக்கடுமை யான வறுமைக்குப் பிரதான காரணம்

(1) அவர்கள் பயிர் செய்யும் நிலம் பெரும்பாலும் வளமற்றதா யிருத்தலாகும்

(2) மத்திய கோட்டிற்கு அண்மையிள்ள பிரதேசங்களில் வறட் சிக் காலங்கள் அடிக்கடி ஏற்படுத்தலாகும்

(3) அவர்கள் விவசாயத்திற்குப் பாரம்பரியமான முறைகளைத் தொடர்ந்து கையாளுதலாகும்

(4) சர்வஜன வாக்குரிமை மூலம் தாம் விரும்பிய அரசாங்கத் தைத் தெரிவு செய்யும் வாய்ப்பினை மக்களுக்கு அளித்தி ருத்தல்

4. உலகின் மூன்றிலொரு பங்கினரின் பிரதான உணவு:

(1) நெல்லாகும் (2) கோதுமையாகும்

(3) இறச்சியாகும் (4) உருளைக்கிழங்காகும்

5. பூரண போசாக்கான உணவு இன்றைய உலக சனத்தொகையில் கிடைக்கப் பெறுபவர்:

(1) $\frac{3}{5}$ பங்கினர் (2) $\frac{1}{5}$ பங்கினர்

(3) $\frac{1}{2}$ பங்கினர் (4) $\frac{1}{3}$ பங்கினர்

6. உலக சுகாதார நிறுவனத்தின் கருத்துப்படி ஒரு மனிதனுக்கு நாளொன்றுக்குத் தேவையான கலோரி உணவு:

(1) 3500—4000 வரையாகும் (2) 2500 — 35000 வரையாகும்

(3) 3000 — 3500 ,, (4) 2500 — 3000 ,,

7. மிகை உணவு காணப்படும் நாடுகள்:

(1) அமெரிக்கா, யப்பான், சீனா

(2) அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இரசியா

(3) அமெரிக்கா, இரசியா, ஜெர்மனி

(4) அமெரிக்கா, யப்பான், இரசியா.

8. உலக சனத்தொகையில் $\frac{3}{5}$ பங்கினருக்கு உணவு கிடைக்கிறது. ஆனால்:
(1) போசாக்கான உணவு கிடைக்கவில்லை.
(2) புரத உணவுகள் கிடைக்கவில்லை.
(3) பாற்பொருள் உணவுக்ள் கிடைப்பதில்லை.
(4) அவையாவுமான உணவுகள் கிடைப்பதில்லை:

9. பசுமைப் புரட்சியின் உச்சப் பயனைப் பெற்றமையால் அறுவடை வீதங்கள் உயர்ந்த நாடுகள்:
(1) ஐக்கிய அமெரிக்கா, ஜேர்மனி
(2) அவுஸ்திரேலியா, யப்பான்
(3) யப்பான், ஐக்கிய இராச்சியம்
(4) சீனா, ஐக்கிய இராச்சியம்

10. ஆபிரிக்காவின் உணவுப் பிரச்சினையைத் தீர்க்க உலக உணவு விவசாய அமையம் கண்டுபிடித்த புதிய பயிர்:
(1) ட்றிடிக்கேல் (2) றை
(3) ருவண் டாகிக் கோதுமை (4) ஓட்ஸ்

11, 'அ' பகுதியிலுள்ளவை நாடுகள். 'ஆ' பகுதியிலுள்ளவை உணவுகள். பொருத்துக:

| 'அ' | 'ஆ' |
|---|---|
| (1) சீனா, இலங்கை | (1) கோதுமை |
| (2) ஐரோப்பிய நாடுகள் | (2) வாழைப்பழம் |
| (3) அயர்லாந்து, கனடா | (3) இறைச்சி |
| (4) ஹவாய் | (4) மரவள்ளிக்கிழங்கு |
| (5) ஐக்கிய அமெரிக்கா | (5) நெல் |
| (6) எத்தியோப்பியா | (6) உருளைக்கிழங்கு |

12. பின்வரும் பகுதியிலுள்ள இடைவெளிகளைப் பொருத்தமான விடைகளை எழுதி நிரப்புக.

உலகில் இன்று (1) ................... மில்லியன் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். உலகில் பூரண போசாக்கான உணவு இன்று உலக

சனத்தொகையில் (2) ..................... பங்கினருக்கே கிடைக்கின்றது. அபிவிருத்தியடைந்து வரும் நாட்டு மக்கள் (3) ..................... யினாலும், (4) ..................... யினாலும் வாடுகின்றனர். உலக உணவுப் பிரச்சினைக்கு முக்கிய காரணம் துரித வேகத்தில் பெருகும் (5) .............................. ஆகும். உலர் நிலங்களை அபிவிருத்தி செய்வதற்குரிய அபிவிருத்தித் திட்டங்கள் உலகில் ஆரம்பிக்கப்பட்டுள்ள. அவற்றில் ஒன்று இலங்கையில் செயற்படுத்தப்படும் (6) ..................... திட்டமாகும். பசுமைப் புரட்சியின் உச்சப் பயனைப் பெற்ற நாடு (7) ..................... ஆகும். விளைநிலத்தில் (8) ..................... அதிகரிப்பதும் பயிரின் (9) ..................... அதிகரிப்பதும் உணவுப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வாகும்.

13. பின்வருவன யாவை என எழுதுக

| 'அ' | 'ஆ' |
|---|---|
| (1) பி. ஜீ 367/4 | ..................... |
| (2) ஏ. டீ. ரீ. 27 | ..................... |
| (3) ட்றிடிகேல் | ..................... |
| (4) பி. ஜி 367/7 | ..................... |
| (5) யூரியா | ..................... |
| (6) திலாபியா | ..................... |
| (7) கலோரி | ..................... |
| (8) காபோகைதரேட் | ..................... |
| (9) ஓட்ஸ் | ..................... |

## பகுதி 2

1. உணவுப் பிரச்சினைக்குரிய காரணங்கள் எவை?
2. உலக உணவு விவசாய நிறுவனம் உணவுப் பிரச்சினையைத் தீர்க்க எடுத்த நடவடிக்கைகள் யாவை?
3. உலர் நிலங்களை பயிர்ச் செய்கைக்கு ஏற்ற நிலங்களாக மாற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் 3 எழுதுக.
4. அறுவடை குறைவதற்குக் காரணங்கள் எவை?
5. உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க முன் வந்துள்ள உலக நிறுவனங்கள் எவை?

## வினாத்தாள்: 11

# உலக சனத்தொகைப்பிரச்சினை

பின்வரும் வாக்கியங்கள் சரியா பிழையா என எழுதுக.

1. 1990 ஆம் ஆண்டு உலகின் சனத்தொகை 5346 மில்லியன்களாக உயரும்.........................

2. இறப்பு வீதம் குறைந்து, பிறப்பு வீதம் மாறாது இருக்கும்போது சனத்தொகை வளர்ச்சி வீதம் அதிகரிக்காது .........................

3. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இறப்பு வீதமும் பிறப்பு வீதமும் குறைவாகும் .........................

பின்வரும் வினாக்களுக்குரிய விடைகள் தரப்பட்டுள்ளன. தேர்ந்தெடுத்து உரிய செவ்வகத்தில் எழுதவும்.

| | | | |
|---|---|---|---|
| 1 . 7% | [ ] | 1000 : 28 | [ ] |
| 000 : 13 | [ ] | 1000 : 6 | [ ] |
| 1000 : 37.7 | [ ] | 0 . 7% | [ ] |

4. ஐக்கிய அமெரிக்காவின் சனத்தொகையின் இயற்கை அதிகரிப்பு
5. உலகின் சனத்தொகை வளர்ச்சி வீதம்
6. அபிவிருத்தியடைந்த நாடுகளின் பிறப்பு விகிதம்
7. இலங்கையின் பிறப்பு விகிதம்
8. இலங்கையின் இறப்பு விகிதம்
9. இலங்கையின் சிசு மரண விகிதம்

10. பின்வரும் அட்டவணையை அவதானித்து, பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடையை எழுதுக.

உலக சனத்தொகை:

| ஆண்டு | சனத்தொகை (மில்லியனில்) | இரு மடங்காக எடுத்த காலம் (ஆண்டு) |
|---|---|---|
| 1500 | 500 | — — |
| 1850 | 1200 | 350 |
| 1925 | 2000 | 75 |
| 1975 | 4000 | 50 |


1. 1500 ஆம் ஆண்டிற்கும் 1975 ஆம் ஆண்டிற்குமிடையில் அதிகரித்த சனத்தொகை எவ்வளவு? ..........................

2. உலக சனத்தொகை இருமடங்காவதற்கு எடுத்த காலம் தற்போது அதிகரித்துள்ளதா, குறைந்துள்ளதா? ......................

3. சனத்தொகை துரிதமாக வளர்ச்சியடைந்தமைக்குரிய காரணம் பின்வருவனவற்றில் யாதாக இருக்கலாம்?
(i) அதிக பிறப்பு வீதம் (ii) அதிக இறப்பு வீதம்
(iii) அதிக இடப்பெயர்ச்சி

பின்வரும் வரைபடத்தை அவதானித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

சனத்தொகை வளர்ச்சி




11. எந்தக் கட்டத்தில் பிறப்பு வீதமும் இறப்பு வீதமும் உயர்வாகவுள்ளன? ..............

12. பிறப்பு வீதமும் இறப்பு வீதமும் ஒப்பீட்டளவில் குறைவாக இருக்கும் கட்டம் ..................

13. பிறப்பு வீதம் உயர்வாயும் இறப்பு வீதம் குறைவாயும் இருக்கும் கட்டம். ................

14. இறப்பு வீதம் மிகக் குறைவாயும் பிறப்பு வீதம் குறிப்பிடத்தக்களவு குறைவாயும் இருக்கும் கட்டம்? ..............

15. சனத்தொகைப் பெருக்கம் மிகக் குறைவாக இருக்கும் கட்டம் எது? ..............

16. சனத்தொகை வளர்ச்சி நிலையாக இருக்கும் கட்டம் எது? .................

17. சனத்தொகை வளர்ச்சி வீதம் ஓரளவு குறையும் கட்டம் எது? ................

18. இயற்கையான சனத்தொகை வளர்ச்சி உயர்வாக இருக்கும் கட்டம் எது? .................

19. முதலாவது கட்டத்திற்கு உதாரணமாகக் கூடிய நாடு

(i) இந்தியா (ii) சீனா (iii) யப்பான் (iv) இலங்கை

20. கட்டம் 2 இற்கு உதாரணமாகக் கூடிய நாடு

(i) ஐக்கிய இராச்சியம் (ii) அவுஸ்திரேலியா

(iii) சீனா (iv) இலங்கை

21. கட்டம் 3 இற்கு உதாரணமாகக் கூடிய நாடு

(i) பிரான்ஸ் (ii) ஸ்பெயின் (iii) சுவீடன் (iv) இந்தியா

22. கட்டம் 4 இற்கு உதாரணமாகக் கூடிய நாடு

(i) பர்மா (ii) அவுஸ்திரேலியா

(iii) ஐக்கிய அமெரிக்கா (iv) கனடா

## வினாத்தாள்: 12

# உலகின் சக்தி நெருக்கடி

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் தரப்பட்டிருக்கும் விடைகளுள் சரியானதைத் தெரிவு செய்க.

1. உயிர்ச்சக்தி எனக் கொள்ளக்கூடியது.

(1) மனிதவலு (2) நிலக்கரி

(3) பெற்றோலியம் (4) சூரியசக்தி

2. மீளா வளங்கள் எனக் கொள்ளக் கூடியது.
   (1) நிலக்கரி (2) சூரியசக்தி
   (3) நீர்மின்வலு (4) காற்றுவலு
3. 'பெற்றோலியம்' என்பது
   (1) உயிர்ச்சக்தி (2) உயிரில் சக்தி
   (3) மீளும் சக்தி (4) யாவும் ஆகும்
4. 'ஒபெக் நிறுவனத்தின் பொருளாதார வெற்றி எதனைக் காட்டுகின்றது?
   (1) பெற்றோலியத்தை ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கிடையேயுள்ள பொருளாதாரப் போட்டி அபிவிருத்திக்கு ஒரு முட்டுக்கட்டையாகும்.
   (2) அரசியல் முறையில் அராபிய நாடுகள் பல அரசுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பது முன்னேற்றத்திற்கு ஒரு தடை.
   (3) அராபிய நாடுகளின் அரசியல் இறைமை முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாகும்.
   (4) மத்திய கிழக்கில் வேறுபட்ட கலாசாரங்கள் இருப்பது முன்னேற்றத்திற்கு ஒரு முட்டுக்கட்டையாகும்.

'அ' பகுதியிலுள்ள சக்திவளங்களை வகைப்படுத்துக. 'ஆ' பகுதியின் அவை எவையென எழுதுக.

A—மீளும் சக்தி B—மீளாச் சக்தி

C—உயிர்ச் சுவடு D—உயிர்ச்சுவடில்லாதது

உதாரணம்: விலங்குவலு — Aயும் Dயும்

| (அ) | (ஆ) |
|---|---|
| 5. நிலக்கரி | ........................................ |
| 6. சூரிய வெப்பம் | ........................................ |
| 7. கரு வலு | ........................................ |
| 8. இயற்கை வாயு | ........................................ |
| 9. நீர்மின் | ........................................ |
| 10. உயிரியல் வாயு | ........................................ |
| 11. பெற்றோலியம் | ........................................ |
| 12. மனித வலு | ........................................ |
| 13. கடலலை | ........................................ |
| 14. காற்று | ........................................ |
| 15. விலங்குகள் | ........................................ |

## வினாத்தாள்: 13

# சூழல் மாசுபடுதல்

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் தரப்பட்டிருக்கும் விடைகளுள் சரியானதைத் தெரிவு செய்க.

1. அபிவிருத்தியடைந்த நாடுகளில் சூழல் அழுக்கடைதல் ஒரு பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இதற்கு முக்கிய காரணம்
   (1) சனத்தொகை அதிகரிப்பு (2) போர்கள்
   (3) தொழில்முறையில் வளர்ச்சி (4) பொருளாதார வளர்ச்சி

2. ஒரு நாட்டின் நவீன தொழிநுட்ப முறையில் அதிகரித்த உபயோகத்தினால் உண்டாகும் விரும்பத்தகாத விளைவுகளுள் மிக மோசமானது:
   (1) அந்த நாட்டின் இயற்கை வளங்கள் ஒழிந்து போவதனால் ஏற்படும் திடீர்ப் பொருளாதார மந்தமாகும்
   (2) மக்களின் உடல் நலத்திற்குத் தீங்கு பயக்கும் விளைவுகளாற் சூழல் மாசுபடுவதாகும்
   (3) பொறிகளுக்கு அடிமையாகவிருக்கும் சார்பு நிலை காரணமாக அந்நாட்டின் கலாசாரத்தில் ஏற்படும் வீழ்ச்சியாகும்
   (4) மனித உழைப்பின் மதிப்பு வீழ்ச்சியடைவது காரணமாகச் சம்பளங்களின் வீச்சுத் தாழ்ச்சியடைவதாகும்

3. நீரை அசுத்தப்படுத்தும் பிரதான காரணிகள்:
   (1) தொழிற்சாலைகள் மூலம் வளி அசுத்தப்பட்டு மழையுடன் கலந்து நீர்நிலைகளில் நிலைப்பது
   (2) தொழிற்சாலைகளின் கழிவுகள், நகரப்புறக் கழிவுகள் என்பன நீர்நிலைகளில் வந்து சேர்வது
   (3) கிருமி நாசினிகள் நீருடன் சேர்வது
   (4) மேற்குறித்த காரணிகளும்

பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் சரி என்றும் பிழையாயின் பிழையென்றும் எழுதுக.

4. சூழலின் சமநிலை குழம்புவதால் சூழல் மாசடைதல் நிகழ்கிறது ..................

5. வளி மாசுறுவதால் நாம் சுவாசிக்கும் காற்றிலுள்ள ஒட்சிசன் அதிகரிக்கிறது ...............

6. சனச்செறிவு மிக்க நகரங்களிலேயே நீர் மாசுறுதல் அதிகம் ................

7. பசுமைப் புரட்சியால் விளைச்சல் அதிகரித்த அதேவேளை, உபயோகிக்கும் இரசாயன உரங்கள் கிருமி நாசினிகள் சூழலை மாசுற வைத்துள்ளன. .................

8. விகாரப்படாமலும், அழியாமலும் மாசுபடாமலும் ஒரு சூழலைப் பேணுவதே சூழற் பாதுகாப்பாகும். ..............

9. சூழலை மாசுற வைக்கும் ஏனைய காரணிகளோடு பார்க்கும் போது ஒலியினால் சூழல் மாசுறுதல் அதிக கேடன்று ..............

## மாதிரி வினாத்தாள்: 2

# சமூகக்கல்வி

## பகுதி 1

(எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.)

1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4) என்று இலக்கமிடப்பட்டிருக்கும் விடைகளுள் சரியானது அல்லது மிகவும் பொருத்தமானது என நீர் கருதுவதனைத் தெரிவு செய்க.

1. குடியாட்சி நிலவும் நாட்டில் அரசாங்கக் கட்சியைத் தேரிந்தெடுப்பதற்குள்ள உரிமை போன்று.
   (1) வாக்குரிமையையளிக்க முடியும்.
   (2) பல கட்சிகளை ஏற்படுத்த முடியும்.
   (3) எதிர்கட்சியொன்றைத் தேர்ந்தெடுக்க முடியும்.
   (4) தொழிற் சங்கங்களை நிறுவ முடியும்.

2. குடியாட்சி முறையில் மக்களது உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் ஒவ்வொரு பிரஜையும்:
   (1) கட்சியொன்றின் அங்கத்தவனாக இருத்தல் வேண்டும்.
   (2) பொதுத் தேர்தலின் போது தவறாது வாக்களிக்க வேண்டும்.

(3) அரசாங்க உத்தியோகத்தனாக இருத்தல் வேண்டும்.

(4) சிறந்த அரசாங்கத்தை அமைத்ததுடன் நின்றுவிடாது அரசியல் கருமங்களில் அக்கறை கொண்டு ஈடுபட்டுத் தனது உரிமைகளைப் பயன்படுத்தல் வேண்டும்.

3. குடியாட்சிக்குச் சவாலாக அமையும் சக்திகளுள் ஒன்று:

(1) அரசாங்கக் கட்சி (2) எதிர்க் கட்சி

(3) தேர்தலில் தோல்வியடைந்த கட்சி

(4) பொது மக்களால் பெரும்பான்மை ஆதரவு அளிக்கப்பட்ட கட்சி

4. ஒரு குடியாட்சியில் எதிர்க்கட்சிக்குப் பணிமுறைப் பதவி நிலை (உத்தியோக அந்தஸ்து) அளிக்கப்படுவது ஏனெனில்:

(1) அது நிர்வாகச் செயன்முறையின் இன்றியமையாத ஓர் உறுப்பாக இருக்கின்றமையால்.

(2) அது தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளைக் கொண்டிருப்பதால்.

(3) எதிராளிகளின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு அது உதவுகின்றமையால்.

(4) தீர்மானஞ் செய்வதில் தாமதம் உண்டாவதை அது தவிர்க்கக் கூடுமாகையால்.

5. சனநாயக உரிமைகளைப் பாதுகாத்தற் பொருட்டுக் கட்டாயமாக நிறைவேற்றப்பட வேண்டிய நிபந்தனை எதுவெனில்:

(1) நீதித்துறையானது தகவில்லா ஆதிக்கத்திற்குட்படாது சுதந்திரமாக இருத்தல் வேண்டும் என்பதாகும்.

(2) பாதுகாப்புச் சேவைகள் வல்லமையுள்ளவையாக இருத்தல் வேண்டும் என்பதாகும்.

(3) நிருவகம் திறமையுள்ளதாக இருத்தல் வேண்டும் என்பதாகும்.

(4) வாக்களித்தல் கட்டாயமாக்கப்படுதல் வேண்டும் என்பதாகும்.

6. பின்வருவனவற்றுள், அரசியற் கட்சி முறைமை பற்றி சரியான கூற்று எது?

(1) உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டிலும் கட்சி முறைமை ஒன்று உண்டு.

(2) ஒரு கட்சி முறைமை இருப்பது ஒரு சுதந்திர சமூகத்தின் அறிகுறியாகும்.

(3) கட்சி முறைமை சமூகத்தில் தேவையற்ற பிரிவினைகளை உண்டாக்கிறது.

(4) அபிவிருத்தியடையும் நாடுகளுக்கு கட்சி முறைமை அவசியமாகும்.

7. ஒரு பொது தேர்தலின் போது மதியூகம் உள்ள ஒரு வாக்காளன்,

(1) எந்த அபேட்சகருக்காயினும் வாக்களித்தல் தனது கடமை என்ற நம்பிக்கையில் செயலாற்றுவான்.

(2) அபேட்சகரின் தனிப்பட்ட குணாதிசயங்களை அடிப்படையாகக் கொண்டு வாக்களிப்பான்.

(3) கட்சிக் கொள்கைகளை நன்கு விளங்கிக் கொண்டு வாக்களிப்பான்.

(4) தனது சொந்த நன்மையை மனதிற் கொண்டு வாக்களிப்பான்.

8. ஒரு சனநாயக சமுகத்தில் எதிர்க் கட்சியின் கடமை யாது?

(1) அரசாங்கக் கட்சியைக் கண்டிக்கும் அதே வேளையில் அவசியமானபோது அதனுடன் ஒத்துழைத்தலாகும்.

(2) அரசாங்கக் கட்சியின் முன்மொழிவு ஒவ்வொன்றையும் வன்மையாகக் கண்டிப்பாதாகும்.

(3) அரசாங்கத்திற் கெதிராகக் கிளர்ந்தெழுமாறு மக்களைத் தூண்டுவதாகும்.

(4) அரசாங்கக் கட்சி நெறி விலகிப் போகும் போதெல்லாம் அதனைச் சரியான வழியில் நெறிப்படுத்துவதாகும்.

9. பாராளுமன்றப் பிரதிநிதிகள் பொதுமக்களுக்குத் திருப்தியளிக்காத கருமங்களைச் செய்ய முற்படும்போது பொதுமக்கள் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளுள் ஒன்று:

(1) புதினப் பத்திரிகை மூலம் கண்டனம் செய்தல்.

(2) அடுத்த தேர்தலின் போது அவர்களுக்கு வாக்களிக்காது விடுதல்.

(3) கட்சித் தலைவர்களிடம் முறையிட்டுத் தக்க நடவடிக்கை எடுத்தல்.

(4) அப்பிரதிநிதியின் நடவடிக்கையை பொது மக்களிடையே அம்பலப்படுத்தி அவர்களது ஆதரவைக் குறைத்தல்.

10. பின்வருவனவற்றில் குடியாட்சி ஒன்றில் மாத்திரம் அனுபவிக்கக் கூடிய உரிமை எது?

(1) வாக்குரிமை (2) அரசியல், பேச்சு, எழுத்துரிமை

(3) மத உரிமை (4) கல்விகற்கும் உரிமை

11. குடியாட்சிச் சமூகமொன்றில் அரசியல், பேச்சு, எழுத்துச் சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுவது.

(1) நடைமுறையிலுள்ள அரசாங்கத்திற்கெதிராக மக்கள் கிளர்ச்சி செய்யும்போது

(2) இராணுவச் சட்டம் அமுலிலிருக்கும் போது

(3) பொதுத் தேர்தற் காலங்களில்

(4) பொதுத் தேர்தல் நடந்து முடிந்த பின்

12. குடியாட்சி முறையில் அடிப்படை அம்சம் என்னவெனில்:

(1) மத்திய அரசாங்கத்தினால் உள்ளூர் அதிகார சபைகள் கட்டுப்படுத்தப்படுவதாகும்.

(2) மக்கள் பங்கு பற்றுதலாகும்.

(3) சிறுபான்மையினரின் சிறப்புரிமைகளாகும்.

(4) பெரும்பான்மையினருக்குக் கொடுக்கப்படும் சிறப்பிடம்

13. குடியாட்சிச் சமூகத்தில் தீர்மானங்கள் செய்வதினாலும் அவற்றைச் செயற்படுத்துவதினாலும் மேற்கொள்ளப்பட வேண்டிய முறை:

(1) தனியாள் ஒவ்வொருவரினதும் உடன்பாட்டைப் பெறக் கூடிய தீர்மானங்களை மாத்திரம் செயற்படுத்துவதாகும்.

(2) உடன்படாதோரை புறக்கணித்து விட்டு பெரும்பான்மையினரின் விருப்பத்தைச் செயற்படுத்துவதாகும்.

(3) பெரும்பான்மையோரின் விருப்பத்தைச் செயற்படுத்தும் அதே வேளையில் உடன்படாதோரின் விருப்பங்களைப் பொறுத்துக் கொள்வதாகும்.

(4) அரசாங்கம் மக்களால் நயக்கப்படுவதற்கேற்ற தீர்மானங்களைச் செயற்படுத்துவதாகும்.

14. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பயிர்ச் செய்கையில் உச்ச விளைவைப் பெறக் கைக்கொள்ள வேண்டிய நடவடிக்கை எது?

(1) பயிர் செய்கையில் புதிய தொழில் நுட்ப முறைகளைப் பயன்படுத்துவது.

(2) நீர்ப்பாசனத்தை விரைவாக அபிவிருத்தி செய்வது.

(3) சிறிய விளை நிலங்களை இணைத்துப் பெரிய பண்ணைக ளாக்குவது.

(4) புதிய பயிர்களைப் பயிரிடுவது.

15. உணவுப் பிரச்சனையோடு சேர்த்து, காணியின்மை, வேலை யின்மை ஆகிய பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு:

(1) விவசாய விருத்திச் சேவைகள் மேலும் பயனுறுதியாக்கப் பட வேண்டும்.

(2) விவசாயத்திற்கான உள்ளீடுகைகளும், விவசாயிகளது பாது காப்பும் உறுதிப்பட வேண்டும்.

(3) காணி இல்லாதவர்களுக்குக் காணி வழங்க வேண்டும்.

(4) இயந்திரங்களை மேலும் கூடிய அளவில் பயன்படுத்த வேண் டும்.

16. மனிதனுக்கு நீங்கு விளையாத வகையிலே விவசாயப் பீடைப் பிராணிகளை அழிப்பதற்கு மிகச் சிறந்த முறை:

(1) பீடை எதிர்ப்பு விதைகளை விதைத்தலாகும்

(2) விதைகளையும் பயிர்களையும் சரியான பருவகாலத்தில் நடுதலாகும்.

(3) இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்துதலாகும்.

(4) ஒட்டுண்ணிகளைப் பகுத்துதலாகும்.

17. விவசாயத்தில் சூழலை நீண்டகால நோக்கில் மாசுபடுத்தும் காரணியாக அமைவது:

(1) வளமாக்கிகளை மினகயாகப் பயன்படுத்தல்

(2) கலப்பு இன விதைகளைப் பயன்படுத்துதல்

(3) இயந்திரமயமான உழுதல் முறையைக் கைக்கொள்ளுதல்

(4) சுழற்சிப் பயிர்ச்செய்கை முறைகளைப் பின்பற்றுதல்

18. பெருந் தொகையான மக்களைக் கொண்ட குறைவிருத்தி நாடொன்று விரைவாக அபிவிருத்தியடைவதற்கான வழி:

(1) பிறப்பு வீதத்தைக் குறைத்தலாகும்

(2) தொழில் நுட்பத் திறமை வாய்ந்த தொழிலாளரை ஏற்று மதி செய்தலாகும்

(3) பொறிகளைக் கூடுதலாக உபயோகித்தலாகும்

(4) தொழிலாளரை மிகுதியாகப் பயன்படுத்தும் உற்பத்தி முறைகளை மேற்கொள்ளலாகும்

19. அபிவிருத்தியடைந்து வரும் எல்லா நாடுகளுக்கும் பொதுவான ஒரு அம்சம்:

(1) சனத்தொகை வெவ்வேறு கூட்டத்தினரைக் கொண்டமைந்ததாய் இருத்தலாகும்.

(2) நகர அபிவிருத்தி விரைந்து நடைபெறுதலாகும்.

(3) அந்நிய நாட்டு வியாபாரத்திலிருந்து ஏராளமான வருமானம் பெறப்படுவதாகும்.

(4) வருமானத்தின் பெரும்பகுதி உணவை இறக்குமதி செய்வதில் செலவிடப்பட்டதாகும்.

20. கி. பி. 2000-ஆம் ஆண்டில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் சனத்தொகைக்கும் வருமானத்துக்குமுள்ள விகிதம் 5 : 1 ஆகும். அபிவிருத்தியடைந்த நாடுகளின் சனத்தொகைக்கு வருமானத்திற்குமுள்ள விகிதம் 1 : 20 ஆகும். இதிலிருந்து புரிந்து கொள்வது:

(1) அபிவிருத்தியடைந்த நாடுகளினதும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளினதும் சனத்தொகை அதிகரிக்கின்றது.

(2) அபிவிருத்தியடைந்த நாடுகளினதும், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளினதும் தனி ஆள் வருமானம் எதிர்காலத்தில் சமமாக இருக்கும்.

(3) அபிவிருத்தியடைந்த நாடுகளின் சனத்தொகை அதிகரிக்கும் வேளையில் அவற்றின் வருமானம் அதே விகிதத்திற் குறைந்து கொண்டே செல்லும்.

(4) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் சனத்தொகை அதிகரிக்க அதே விகிதத்தில் தனியாள் வருமானம் அதிகரிக்க மாட்டாது.

21. அபிவிருத்தியடைந்த நாடுகளில் காணப்படும் சனத்தொகைப் பெருக்கத்திற்குப் பிரதான காரணம்:

(1) பிறப்பு வீதம் கணிசமாக அதிகரித்தல்

(2) இறப்பு வீதம் கணிசமாகக் குறைதல்

(3) குடிவகை கணிசமாக அதிகரித்தல்

(4) குடியகல்வு கணிசமாகக் குறைதல்

22. சனத்தொகை வளர்ச்சி வீதம் உயர்வாக இருப்பதற்கு

(1) பிறப்பு வீதம் உயர்வாகவும் இறப்பு வீதம் குறைவாகவும் இருத்தல்

(2) பிறப்பு வீதமும் இறப்பு வீதமும் குறைவாக இருத்தல்

(3) பிறப்பு வீதமும் இறப்பு வீதமும் உயர்வாக இருத்தல்

(4) இறப்பு வீதம் மிகக் குறைவாகவும் பிறப்பு வீதம் குறிப்பிடத்தக்களவு குறைவாயும் இருத்தல்

23. நான்கு வித்தியாசமான சமூகங்களிற் காணப்படும் சில அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. சனநாயகம் மிகவும் வெற்றிகரமாக நிலைக்கக் கூடிய சமூகத்தைக் காட்டும் அம்சங்களின் தொகுதி எது?

(1) கல்வி விருத்தி ஓங்கியுள்ளது. சிறு தொகையினரே பணக்காரர், பெரும்பாலோர் வறியவர், அரசியற் கட்சிகள் பல உள்ளன.

(2) அரசியல் விழிப்புணர்ச்சி ஓங்கியுள்ளது. வருமானங்களினது வித்தியாசம் பெரிதன்று, அரசியற் கட்சிகள் பல உள்ளன.

(3) சிறுதொகையினரே கல்வி கற்றவர். வருமானங்கள் சமமானவை. ஒரே ஒரு அரசியற் கட்சியே உண்டு.

(4) எல்லாரும் கல்வி கற்றுள்ளனர், பெருந்தொகையினர் தமது அடிப்படைத் தேவைகளைப் பெறமுடியாதவராய் இருக்கின்றனர். ஒரே ஒரு அரசியற் கட்சியேயுண்டு.

24. இன்று பயன்படுத்தப்பட்டு வரும் புதிய சக்தி மூல வளங்கள்;

(1) நிலக்கரி, பெற்றோலியம், நீர்மின்வலு

(2) மின்சாரம், டீசல், உயிர்வாயு

(3) இயற்கைவாயு, அணுக்கருச்சக்தி, சூரியசக்தி

(4) நிலக்கரி, உயிர்வாயு, பெற்றோலியம்

25. சூழல் மாசடைதலுக்கு இன்றைய உலகில் ஒரு பிரதான காரணியாக விளங்குவது:


(1) மலசல கூடங்களின் அதிகரிப்பு

(2) குப்பை கூளங்களை உரமாகப்பாவித்தல்

(3) தொழிற்சாலைகளின் புகையும் கழிவுப்பொருட்களும்

(4) பயிர்ச் செய்கையின் விஸ்தரிப்பு

மேல்வரும் படத்தை அவதானித்து 26 தொடக்கம் 33 வரை யிலான வினாக்களுக்கு விடை தருக.




26. A என்ற எழுத்தால் குறிக்கப்பட்டு, கருநிறத்தால் நிழற்றப்பட் டுள்ள பிரதேசங்களில் பிரதான செய்கைபண்ணப்படும் பயிர்:
(1) கோதுமை (2) நெல் (3) சோளம் (4) தேயிலை

27. B, C என்பன எதற்குப் பிரசித்தி வாய்ந்தன?
(1) விலங்கு வேளாண்மைக்கு (2) பெற்றோலியத்திற்கு
(3) மீன் பிடித்தொழிலிற்கு (4) முத்துக்குளிப்பதற்கு

28. 1, 2, 3 என இலக்கமிடப்பட்ட நாடுகள் செம்மறி வளர்ப்பிற்குப் புகழ் பெற்றன. அவை:
(1) பிறேசில், தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா
(2) ஆசெந்தீனா, தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா
(3) ஆசெந்தீனா, உருகுவே, நியூசிலாந்து
(4) பராகுவே, சம்பியா, அவுஸ்திரேலியா

29. 4, 5, 6, 7 என்பன உலகில் பிரதான நிலக்கரி உற்பத்தி நாடுகளா கும். அவை முறையே:
(1) கனடா, அயர்லாந்து, ஸ்பெயின், ருசியா
(2) ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், சீனா
(3) கனடா, நியூசிலாந்து, ஜேர்மனி, ருசியா
(4) ஐக்கிய, அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி, ருசியா

30. D என்ற எழுத்தால் குறிக்கப்பட்டுள்ள பிரதேசம் எதற்கு மிகப் பெயர் பெற்றது?

(1) நிலக்கரி (2) செம்பு (3) பேரீந்து (4) பெற்றோலியம்

31. E என்பது ஒரு மீன்பிடித்தளம் அது?

(1) கிழக்கு ஆசியாக் கரையோரம்
(2) வடமேற்கு ஐரோப்பாவின் கரையோரம்
(3) வடஅமெரிக்காவின் வடகிழக்குக் கரையோரம்
(4) வடஅமெரிக்காவின் வடமேற்குக் கரையோரம்


32. F, G, H, J என்பன ஒரு நார்ப்பயிருக்குப் புகழ் பெற்ற நாடுகள்:

(1) பட்டு (2) பருத்தி (3) சணல் (4) கம்பளி

33. F, G, H, J என்பன முறையே

(1) எகிப்து, சூடான், உகண்டா, பிறேசில்
(2) எகிப்து, எதியோப்பியா, சம்பியா, ஆசெந்தீனா
(3) லிபியா, எகிப்து, சம்பியா, பிறேசில்
(4) எகிப்து, சூடான், நைஜீரியா, ஆசெந்தீனா

கீழ் காணப்படும் சமவுயரக் கோட்டுப் படத்தை அவதானித்து 34—40 வரையிலான வினாக்களுக்கு விடை தருக.




(சமவுயரக் கோடுகளை மீற்றர் உயரங்களில் கொள்க)

34. படத்தில் 1 என இலக்கமிடப்பட்டிருப்பது:
(1) சிறு குன்று (2) பாறைத் தொடர்
(3) கூம்புக்குன்று (4) நீள்குன்று

35. படத்தில் 2 என்பது:
(1) சிறு குன்று (2) பாறைத் தொடர்
(3) கூம்புக்குன்று (4) நீள்குன்று

36. படத்தில் A—B என்பது:
(1) மென் சாய்வு (2) குத்துச்சாய்வு
(3) குழிவுச் சாய்வு (4) குவிவுச் சாய்வு

37. படத்தில் வட கிழக்கு மூலையில் காணப்படுவது:
(1) சிறு குன்று (2) கூம்புக்குன்று
(3) நீள் குன்று (4) பாறைத் தொடர்

38. படத்தில் C—D என்பது:
(1) மென் சாய்வு (2) குழிவுச் சாய்வு
(3) குத்துச் சாய்வு (4) குவிவுச் சாய்வு

39. படத்தில் காணப்படும் பிரதான ஆறு செல்வது:
(1) வடகிழக்கு - தென்மேற்காக (2) வடக்கு - தெற்காக
(3) கிழக்கு - மேற்காக (4) தென் கிழக்கு - வடமேற்காக

40. படத்தில் காணப்படும் குடியிருப்பில் காணப்படும் வழிபாட்டுத் தலம்:
(1) இந்துக்கோயில் (2) கிறிஸ்தவ தேவாலயம்
(3) பள்ளிவாசல் (4) பௌத்த கோயில்

## பகுதி 2

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. (i) ஒரு குடியாட்சியின் பிராதான அம்சங்கள் எவை?
(ii) அதற்காய ஒரு ஆட்சியின் வெற்றிக்கு அவசியமான நிபந்தனைகள் யாவை?

2. (i) பெரும்பான்மை மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தையுடைய குடியாட்சியொன்றில் எதிர்க்கட்சி இருப்பது அவசியமா? விளக்கம் தருக.

(ii) இதனை ஏன் மாற்று அரசு என்றழைப்பார்?

(iii) எதிர்க் கட்சியின் கடமைகள் யாவை?

3. குடிப்பெருக்கத்தின் விளைவாகத் தற்காலச் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சனை உணவுப் பற்றாக்குறையாகும்.

(i) உணவுப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு இன்று மேற்கொள்ளப்பட வேண்டிய மூன்று முக்கிய வழிவகைகளைக் கூறுக.

(ii) ஏதாவது ஒரு வழிவகையை உதாரணமாக எடுத்து, அதனைச் சரிவர நிறைவேற்றுவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் மூன்றினைக் கூறுக.

4. உலக உணவுப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்கு உணவு உற்பத்தியைப் பெருக்கிக் கொள்வது ஒரு வழியாகும். உணவு உற்பத்தியை எவ்வித நடவடிக்கைகள் மூலம் பெருக்க முடியும் எனச் சுருக்கமாகக் கூறுக.

5. உலக உணவுப் பிரச்சனைக்கான காரணங்களைச் சுருக்கி விளக்குக.

6. இருபதாம் நூற்றாண்டின் தொழில் நுட்ப அபிவிருத்தியின் காரணமாக தற்கால சமுதாயம் எதிர்நோக்கும் பிரச்சினை சூழல் மாசடைதல் ஆகும்.

(i) ''சூழல் மாசடைதல்'' என்றால் என்ன?

(ii) சூழல் மாசடைதலுக்குக் காரணமாகவுள்ள மூன்று காரணிகளைத் தருக.

(iii) சூழல் மாசடைதலினால் எழக்கூடிய பிரதிகூலமான விளைவுகளைத் தடுப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகளைத் தருக.

7. (i) சனத்தொகைப் பிரச்சினைகள் எவை?

(ii) சனத்தொகைப் பெருக்கம் எவ்வாறு சூழலைப் பாதிப்புறவைக்கின்றது?

## வரலாறு வினாத்தாள்: 1

# மத்தியகால ஐரோப்பா

## பகுதி 1

பொருத்தமான விடையின் கீழ் கீறிடுக:

1. ஐரோப்பாவின் மத்திய காலமென அழைக்கப்படுவது:
   (1) கி. மு. 6 — கி. பி. 15 ஆம் நூற்றாண்டு வரை
   (2) கி. பி. 1 — கி. பி. 5 ஆம் நூற்றாண்டு வரை
   (3) கி. பி. 5 — கி. பி. 10 ஆம் நூற்றாண்டு வரை
   (4) கி. பி. 5 — கி. பி. 15 ஆம் நூற்றாண்டு வரை

2. ஐரோப்பாவில் அரசியல், பொருளாதாரம், சமூகத்துறை ஆகியவற்றில் வளர்ச்சியும் முன்னேற்றமும் காணப்படாத மத்திய காலப் பகுதியை எவ்வாறு அழைப்பார்:
   (1) மானிய முறைக் காலம் (2) இருண்டயுகம்
   (3) மறுமலர்ச்சிக் காலம் (4) புராதன காலம்

3. மானிய முறை என்பது:
   (1) நில உரிமைக்குப் பதிலாக வழங்கப்படும் சேவைகளை அடிப்படையாகக் கொண்டிருந்த சமூக முறைமை
   (2) பிரதானிகளே நிலத்தின் உரிமையாளர்களாக இருந்தமை.
   (3) மக்கள் அடிமைகளாக கணிக்கப் பெற்ற முறைமை.
   (4) திருச்சபையின் ஆதிக்கம் மேலோங்கிய காலம்.

4. மானிய முறை அமைப்பு ஐரோப்பாவில் தோன்றத் தூண்டுகோலாக இருந்த முக்கிய காரணம்:
   (1) அந்நியர் படையெடுப்பால் மத்திய ஆட்சி அமைப்புச் சிதைவுற்றமை.
   (2) உரோமப் பேரரசின் எழுச்சி
   (3) அரசர்கள் பிரபுக்களின் அதிகாரங்கள் ஓங்கியிருந்தமை
   (4) அரசனுக்கு நிலங்கள் யாவும் சொந்தமாக இருந்தமை

5. மானிய முறையின் பொருளாதாரம் எதனை அத்திபாரமாகக் கொண்டிருந்தது?
   (1) அடிமை முறை (2) விவசாயம்
   (3) வெளிநாட்டு வியாபாரம் (4) இறக்குமதி

6. பண்ணைத் தமியர்களில் காணப்பட்ட மூன்று பிரிவினர்:
   (1) சுதந்திரக் குடிகள், பிரபுக்கள், இராணுவ வீரர்கள்
   (2) சுதந்திரக் குடிகள், விவசாயிகள், கூலியாட்கள்
   (3) அடிமைகள், பண்ணைச் சொந்தக்காரர், பிரபுக்கள்
   (4) சுதந்திரக் குடிகள், பண்ணைச் சேவகர், அடிமைகள்.

7. ஐரோப்பாவிற்குப் பொருட்களை வழங்கிய முக்கிய இரு வர்த்தக நிலையங்கள்:
   (1) கொன்ஸ்தாந்திநோபிள், அலெக்சாந்திரியா
   (2) கொன்ஸ்தாந்திநோபிள், வெனிஸ்
   (3) வெனிஸ், அலெக்சாந்திரியா
   (4) லெவாண்டி, பாக்தாத்

8. ஐரோப்பிய வியாபாரிகள் பொருட்களை எந்நாட்டு வர்த்தகர்களிடமிருந்து பெற்றனர்?
   (1) சீனர் (2) இந்தியர் (3) அராபியர் (4) இத்தாலியர்

9. இஸ்லாமியருக்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையே நடைபெற்ற போர்:
   (1) ஏழாண்டு யுத்தம் (2) சிலுவைப் போர்
   (3) மதப் போர் (4) உலகப் போர்

10. கொன்ஸ்தாந்திநோபிளைக் கைப்பற்றியவர்கள் யார்?
   (1) கிறிஸ்தவர் (2) துருக்கியர்
   (3) ஐரோப்பியர் (4) கீழைத் தேசத்தவர்

இடைவெளி நிரப்புக:

ஐரோப்பிய வர்த்தகத்திற்குத் தேவையான பொருட்கள் (11) .................... நாடுகளிலிருந்தே கொண்டு செல்லப்பட்டன. முக்கிய வர்த்தக மார்க்கமாக (12) ........................ (13) .................. அமைந்திருந்தன. (14) .......................... இந்த வர்த்தகத்தில் முக்கியத்துவம் பெற்ற பொருட்கள் சீனாவின் (14) ........................ (15) ........................ (16) ........................ இலங்கையின் (17) .................. (18) .................. (19) ............. என்பனவும் இங்கிலாந்தின் (20) ........................யும் பிரான்சின் (21) .................. (22) ...................... என்பனவும் முக்கிய இடம் வகித்தன:

(23) ........................... ஆண்டு கொன்தாந்திநோபிள் துருக்கியரால் கைப்பற்றப்பட்டதும் (24) ...................... பாதை தடைப்பட்டது. எனவே ஐரோப்பியர் (25) ...................... நாடுகளை அடைவதற்குரிய புதிய பாதைகளைக் கண்டு பிடிப்பதற்கு முற்பட்டனர்.

## பகுதி 2

எல்லாவற்றிற்கும் விடை தருக.

(1) ஐரோப்பாவின் இருண்ட காலம் யாது?
(2) அவ்வாறு கூறக் காரணம் யாது?
(3) மானிய முறை என்றால் என்ன?
(4) மானிய முறை வீழ்சியடையக் காரணங்கள் எவை?
(5) நாடுகாண் பயணங்களை ஊக்குவித்த காரணிகள் எவை?

## வினாத்தாள்: 2

# மறுமலர்ச்சி

## பகுதி 1 (அ)

1. 'மறுமலர்ச்சி' யென்றால்:-
   (1) மீண்டும் மலர்தல். (3) கலைகளின் எழுச்சி.
   (2) மக்கள் புரட்சி. (4) மொழிகளின் வளர்ச்சி.
2. பழைய உரோம நாகரிகத்தின் மையமாக விளங்கிய இடம்:-
   (1) கிரேக்கம் (3) இத்தாலி
   (2) வெனிஸ் (4) கொன்ஸ்தாந்திநோபிள்
3. கி.பி. 1400 ஆம் ஆண்டளவில் அச்சுயந்திரத்தை உற்பத்தி செய்தவர்:-
   (1) ஆல்வா எடிசன் (3) தோமஸ் ஆல்வா
   (2) ஜோன் கட்டன்பேக் (4) மார்க்கோனி
4. மறுமலர்ச்சிக் காலத்தில் முக்கிய எழுச்சி பெற்ற துறை:-
   (1) கலாசாரம் (3) மொழியியல்
   (2) அறிவியல் (4) விவசாய துறை

5. சித்திரக் கலைக்கு முக்கிய நிலையமாக விளங்கிய இடம்:-
(1) உரோம் (2) வியன்னா (3) வெனிஸ் (4) புளோரன்ஸ்

6. மத்திய காலத்தில் செதுக்கப்பட்ட சிற்பக் கலையை எவ்வாறு அழைத்தனர்?
(1) கோதிக் கலை (2) குகைச் சித்திரம்
(3) புடைச் சிற்பம் (4) புராதன கலை.

7. சிற்பக் கலையின் பொற்காலமென வர்ணிக்கப்படும் காலம்:-
(1) 13 ஆம் நூற்றாண்டு (2) 16 ஆம் நூற்றாண்டு
(3) 15 ஆம் நூற்றாண்டு (4) 14 ஆம் நூற்றாண்டு

8. கிரேக்க - உரோம கட்டிடக் கலையை நன்கு எடுத்துக் காட்டும் கட்டிடங்கள்:-
(1) சிஸ்டசின் தேவாலயம், பீட்டர் தேவாலயம்
(2) புளோரன்ஸ் நகரம், லோறன்சின் தேவாலயம்
(3) லோறன்சின் தேவாலயம், சிஸ்டசின் தேவாலயம்
(4) பீட்டர் தேவாலயம், லோறன்சின் தேவாலயம்

9. தற்கால வானியலின் தந்தை கருதப்படுபவர்,
(1) ஹிப்லர் (2) நிக்கலஸ் கொப்பணிக்கஸ்
(3) கலிலியோ கலிலி (4) ஹார்வே

10. விண் வெளியிலுள்ள கோள்கள் நீள் வட்டமாகச் சூரியனைச் சுற்றி வருகின்றன என்பதைக் கண்டுபிடித்தவர்:-
(1) ஜெஹன்னஸ் கெப்லர் (2) கலிலியோ கலிலி
(3) பரசல்சஸ் (4) ஐசக் நியூட்டன்

11. தொலைகாட்டியை முதன் முதல் வடிவமைத்தவர்:-
(1) ஹார்வே (2) கலிலியோ கலிலி
(3) ஹெப்லர் (4) கொப்பணிக்கஸ்

12. ஐசாக் நியூட்டனால் கண்டுபிடிக்கப்பட்ட கண்டுபிடிப்பு:-
(1) புவி ஒழுக்கு (2) குருதிச் சுற்றோட்டத் தொகுதி
(3) புவியீர்ப்பு விதி (4) நீள் வட்டப் பாதை

13. 1486 ஆம் ஆண்டு பர்த்தலோமியோ டயஸ் என்பவர் ஆபிரிக்காவின் தென் முனைக்குச் சூட்டிய பெயர்:
(1) புயல் முனை (2) தெவுந்துர முனை
(3) பேதுறு முனை (4) ஆபிரிக்க முனை

14. பூமி உருண்டை வடிவானதென்பதை நிரூபித்த மாலுமி:-
(1) பார்த்தலோமியோ டயஸ் (2) மகலன்
(3) கொலம்பஸ் (4) அமெரிக்கோவெஸ்புச்சி

15. கொலம்பஸ் எக்கண்டத்தைக் கண்டுபிடித்த பெருமைக்குரியவர்:-
(1) ஆபிரிக்கா (2) அமெரிக்கா
(3) ஆசிரியா (4) அந்தாட்டிக்கா

## பகுதி 1 ஆ

மத்திய காலத்து (1) ..................... (2) ..................... இலக்கிய நூல்களும் தத்துவ நூல்களும் கொன்ஸ் தாந்திநோபிலிலிருந்து கிறிஸ்தவர்களால் (3) ..................... கொண்டு செல்லப்பட்டு மீண்டும் கிரேக்க உரோம கலாசாரம் எழுச்சி பெற்றது. மறுமலர்ச்சிக்கு வழி வகுத்த நீண்ட காலக் காரணி (4) ..................... விருத்தியாகும் மறுமலர்ச்சி விரைவிற் பரவக் காரணிகளாக அமைந்தவை (5) ..................... (6) ..................... கண்டு பிடிக்கப்பட்டமையாகும். இக் காலத்தில் (7) ..................... (8) ..................... ஆகிய மொழிகள் எழுச்சி பெற்றன. மத்திய காலத்தில் கலைஞர்களின் ஆக்கங்களில் (9) ..................... பொறிக்கப்பட்டதுடன் (10) ..................... சார்புடையனவாக இருந்த நிலைமாறி (11) ..................... படைப்புக்கள் நிர்மாணிக்கப்பட்டன. இதன் விளைவாக (12) ..................... இன்பங்களுக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டன. சித்திரங்களின் (13) ..................... உருவங்களும் பெரும்பாலும் (14) ..................... வரையப்பட்டதுடன் (15) ..................... ..................... உருவங்களும் வரையப்பட்டன.

## பகுதி 2

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. மறுமலர்ச்சி ஏற்பட்ட துறைகள் எவை?
2. மறுமலர்ச்சி ஏற்பட உடனடிக் காரணம் யாது?
3. மறுமலர்ச்சி என்ற பதத்தை விளக்குக?

4. மறுமலர்ச்சிக் காலத்தில் வாழ்ந்த் சிறந்த சித்திரக் கலைஞர்கள் யாவர்?

5. மறுமலர்ச்சிக் காலத்தில் புகழ் பெற்ற சித்திரக் கலைஞர் யார்? அவர் வரைந்த சிறந்த கலைப் படைப்புகள் எவை?

6. மத்திய கால கட்டடக் கலையின் விசேட அம்சங்கள் எவை?

7. நாடுகாண் பயணங்களில் ஈடுபட்ட மாலுமிகளை கால ஒழுங்கின் படி எழுதுக.

8. நாடுகாண் பயணங்களுக்கு உதவிய விஞ்ஞான கண்டுபிடிப்புக் கள் எவை?

9. சமயச் சீர்திருத்த இயக்கத்திலே முன்னின்று உழைத்த மூவரு டைய பெயர்களைக் குறிப்பிட்டு அவர்கள் ஒவ்வொருவரும் கூறிய கருத்துக்களைக் குறிப்பிடுக.

## வினாத்தாள்: 3

# 16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கை

## பகுதி 1

பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க:-

1. 1498 இல் வஸ்கொடகாமா கள்ளிக் கோட்டையை அடைந்த ஏழு ஆண்டுகளின் பின் இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயக் குழுவின் தலைவன்:-
   - (1) கடலோடி ஹென்றி (2) லோறஞ்சோடி அல்மெய்டா
   - (3) அல்பு கூர்க்கே (4) ஜோன் பைபஸ்

2. 15 ஆம் நூற்றாண்டில் இலங்கையின் முக்கியமான இராச்சியம்:-
   - (1) கோட்டை (2) கொழும்பு
   - (3) கண்டி (4) யாழ்ப்பாணம்

3. 16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையிலிருந்த இராச் சியப் பிரிவுகள்:-
   - (1) கோட்டை, மலையகம், வன்னி
   - (2) கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம்
   - (3) கோட்டை, கம்பளை, யாழ்ப்பாணம்
   - (4) கோட்டை, றைகம, சீதாவாக்கை

4. கோட்டை இராச்சியப் பொருளாதாரத்தின் அச்சாணியாக அமைந்திருந்தது:-

(1) வாசனைத் திரவியங்கள் (2) விவசாயம்

(3) ஏற்றுமதி இறக்குமதி (4) கறுவா

5. 6 ஆம் பராக்கிரமபாகு கோட்டையை ஆண்ட காலத்தில் மலையகத்தின் பிரதானி:-

(1) கரலியத்த பண்டார (2) கோணப்பு பண்டார

(3) யோதிய (4) டொன்யுவான்

6. கோட்டை இராச்சிய ஆதிக்கத்தை உதறித் தள்ளி சுதந்திரமாக செயல் பட்ட மலையக அரசன்:

(1) கோனப்பு பண்டாரன் (2) டோனாகதரினா

(3) 8 ஆம் விக்கிரமபாகு (4) கேனாசம்மத் விக்கிரமபாகு

7. மலையக இராச்சியத்தின் அன்றைய தலைநகர்:-

(1) கட்டுகாஸ்தோட்ட (2) செங்கடகலை

(3) கம்பளை (4) கேவா கேத்த

8. 14 ஆம் நூற்றாண்டு ஆரம்பத்தில் யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி செய்த அரச பரம்புரையினர்:-

(1) பரராஜசேகரன் (2) சங்கிலியன்

(3) ஆரியச்சக்கரவர்த்திகள் (4) அழகக்கோனார்

9. 6 ஆம் பராக்கிரமபாகு காலத்தில் யாழ்ப்பாண அரசைக் கைப் பற்றிய கோட்டை அரசனின் தளபதி:-

(1) சப்புமல்குமார (2) டொன்யுவான்

(3) சங்கிலி (4) ஆரியச்சக்கரவர்த்தி

10. யாப்பாண இராச்சியத்தை சப்புமல்குமரையாவிடம் இழந்த அரசன்:-

(1) கசைசூரிய சிங்கையாரியன் (2) உக்கிரசிங்கன்

(3) ஆரியச்சக்கரவர்த்திகள் (4) சிங்கைப் பரராசசேககன்

11. 'அ' பகுதியிலுள்ளவற்றை 'ஆ' பகுதியுடன் சரியான ஒழுங்கில் இணைத்தால்:-

| 'அ' - பகுதி | | | 'ஆ' - பகுதி |
|---|---|---|---|
| யமுனைஏரி | — | (A) | பரராசசேகரன் |
| தமிழ் சங்கம் | — | (B) | வைத்திய நூல் |
| பரராசசேகரம் | — | (C) | காவிய நூல் |
| இரகுவம்சம் | | (D) | நல்லூர் |

(1) A, B, D, C (2) D, A, B, C
(3) A, D, B, C (4) D, B, C, A

இடைவெளிகளை நிரப்புக:-

15 ஆம் நூற்றாண்டிலே கோட்டை முக்கிய இராச்சியமாக விளங்கியது. இந்நூற்றாண்டின் இறுதியில் 12. ................ 13 ...................... 14. ...................... என்பன சுதந்திர இராச்சியங்களாக செயல்பட ஆரம்பித்தன. 'ஸ்ரீ லங்காதீஸ்வர சக்கரவர்த்தி' என்ற பட்டங்களை 15. ...................... மன்னர்கள் சூடிக்கொண்டனர்.

## பகுதி 2

1. 16 ஆம் நூற்றாண்டின் கோட்டை இராச்சியத்தின் எல்லை யாது?
2. இக் காலத்தின் ஏற்றுமதிப் பொருட்கள் எவை?
3. 1478 இல் யாழ்ப்பாணத்தின் அரசனாகவிருந்த சிங்கைப் பரராசசேகரன் கட்டிய கோவில்கள் எவை?
4. மலையகப் பஞ்ச நாடு என்று குறிப்பிடக் காரணம் யாது?
5. மலையக வீட்டுத் தோட்டங்களில் செய்கை பண்ணப்பட்டவை யாவை?

## வினாத்தாள்: 4

# இலங்கையும் போர்த்துக்கீசரும்

## பகுதி 1

எல்லா வினாக்களுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க:-

1. இந்தியா வந்த போர்த்துக்கீசர் எவரிடமிருந்த வர்த்தகத்தைக் கைப்பற்றினர்:-

(1) சீனர் (2) முஸ்லீகள் (3) ஒல்லாந்தர் (4) உரோமர்

2. விஜயபாகு கொலை நடந்த ஆண்டு இடமும்::
(1) 1512 இல் கோட்டையில்
(2) 1521 இல் றைகம
(3) 1509 இல் கோட்டை
(4) 1524 இல் சீதாவாக்கை

3. மத்தும பண்டாரனுக்கு வழங்கிய இன்னொரு பெயர்:-
(1) றைகம பண்டார (2) டொன் யுவன்
(3) டொன் பிலிப் (4) புரான் சுப்பு

7. 1543 இல் போர்த்துக்கல்லில் முடி சூட்டப்பட்ட இலங்கை மன்னன்:-
(1) மத்தும பண்டாரன் (2) டொன் பிலிப்
(3) தர்மபாலன் (4) புவனேகபாகு

5. 1557 இல் எந்த அரசன் கத்தோலிக்கனாக ஞானஸ்தானம் பெற்றான்:-
(1) புவனேகபாகு (2) மாயாதுன்னை
(3) டொன் பிலிப் (4) தர்ம பாலன்

6. ஹறி பிட்டியே நிலாமையினால் சீதாவாக்கைக்குக் கொண்டு செல்லப்பட்டது:
(1) தந்த தாது (2) தர்மபாலனின் சிலை
(3) அரசபொக்கிஷம் (4) அரசனின் கிரீடம்

7. சீதாவாக்கை இராச்சியத்தின் எழுச்சியின் முதலாவது முக்கிய கட்டம்:-
(1) றைகம இராச்சியம் இணைக்கப்பட்டமை
(2) தர்மபார்லன் கிறீஸ்தவனாக மாறியமை
(3) போர்த்துகேயரை விரட்ட இயக்கம் ஆரம்பிக்கப்பட்டமை
(4) முல்லேரியாவில் பெற்ற வெற்றி

8. மலையகத்தை ஆக்கிரமித்து சீதாவாக்கையுடன் இணைத்த மன்னன்:-
(1) விக்கிரமபாகு (2) மாயாதுன்னை
(3) இராசசிங்கன் (5) கரலியத்தே பண்டார

9. யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்த போர்த்துக்கீசத் தளபதி:-
(1) லோறன்ஸோ டி அல்மெய்டா
(2) கொன்ஸ்தாந்தைன் டி பிரகன்ஸா
(3) அஸி விடோ
(4) டொன் பிலிப்

10. 1621 இல் யாழ்ப்பாண இராச்சியத்தைப் போர்த்துக்கேயரின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்த போர்த்துக்கீசத் தளபதி:-
(1) கொன்ஸ் தாந்தைன் (2) அஸிவிடோ
(3) ஒலிவேரா (4) பிரகன்ஸா

பின்வரும் நிகழ்ச்சிகள் நடைபெற்ற ஆண்டுகளை எழுதுக:-

11. விஜயபாகு கொலை —
12. முல்லேரியா யுத்தம் —
13. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தமை —
14. தர்மபாலன் இறந்தமை —
15. மயாதுன்னை இறந்தமை —

இடைவெளிகளை நிரப்புக.

போர்த்துக்கேயரின் கீழைத் தேச மைய நிலையம் 16. ..................... ஆகும், டமஸ்கஸ், மலாக்கா ஆகிய இடங்களில் 17. ..................... அமைத்தனர். இவ்வாறு இந்து சமுத்திரத்தில் தமது பலத்தை ஏற்படுத்திய பின்னர் 18. .............. கப்பல்களை 19. ..................... ... அடுத்து கொழும்பில் 20. ..................... ஒன்றை அமைத்தனர். போர்த்துக்கீசர் கோட்டையின் விவகாரங்களில் தலையிடக் கிடைத்த சந்தர்ப்பம் 21 ..................... ஆகும். இச் சம்பவத்தின் பின் கோட்டை இராச்சியம் 22. ..................... 23. ..................... 24. ..................... என்ற மூன்று பிரிவுகளாகப் பிரிந்தது. கோட்டை அரசனுக்கும் சீதாவாக்கை அரசனுக்கும் பகைமை ஏற்படக் காரணம் 25. ..................... கோட்டையிலிருந்து வெளியேற்ற முற்பட்டமையாகும். இருவருக்குமிடையில் நடைபெற்ற போர்களின் போது புவனேகபாகுவிற்கு 26. ...... .........

மாயதுன்னைக்கு 27. ........................ உதவி செய்தனர். கோட்டை அரசன் போர்த்துக்கேயருக்கு போர்ச் செலவிற்கு பதிலாக 28. ........................ கொடுத்தான். இறைகம பண்டாரன் இறந்ததும் 29 ........................ இராச்சியம் 30. .................... இணைக்கப்பட்டது.

## பகுதி 2

1. சிங்கள அரசனும் போர்த்துக்கேயரும் முதலாவது சந்திப்பின் போது செய்து கொண்ட ஒப்பந்தம் யாது?
2. தர்மபாலனின் தாய் தந்தையரின் பெயர் யாது?
3. தர்மபாலனின் சிலை போர்த்துக்கலில் முடிசூட்டிய பின் இலங்கை வந்த மதக் குழுவினர் யார்?
4. கோட்டை இராச்சியத்தை விட்டு மக்களும் பௌத்த குருமாரும் வெளியேறி சீதாவாக்கை இராச்சியத்தை ஆதரிக்க காரணம் யாது?
5. மல்வானை ஒப்பந்தம் என்பதை விளக்குக.
6. சீதாவாக்கை இராச்சியத்தின் வீழ்ச்சிக்குக் காரணம் யாது?

## வினாத்தாள்: 5

# மலையக இராச்சியம்

## பகுதி 1

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க:-

1. யமசிங்க பண்டாரவை அரசனாக்கும் பொருட்டு போர்த்துக்கேயர் யாருடைய தலைமையில் கண்டிக்குப் படை அனுப்பினர்?

   (1) கோணப்பு பண்டார (2) றைகம் பண்டார

   (3) கரலியத்தே பண்டார (4) டொன் யுலன்

2. இராசசிங்க மன்னனின் படையைக் கோணப்பு பண்டாரவின் படை தோற்கடித்த இடம்:-

(1) பலன (2) கடுகண்ணாவ

(3) கணேதன்ன (4) வெல்லச

3. 'அ' பகுதியிலுள்ளவற்றை 'ஆ' பகுதியுடன் இணைத்தால் சரியாக வரும் தொகுதி:-

| 'அ' - பகுதி | | 'ஆ' - பகுதி |
|---|---|---|
| 1. கோணப்பு பண்டார | — | A மலையக அரசன் |
| 2. குசுமானதேவி | — | B தந்த தாது |
| 3. கரலியத்த பண்டார | — | C டோனாதரினா |
| 4. தெல்கம் விகாரை | — | D விமதர்மசூரியன் |

(1) D, C, A, B (2) A, C, D, B

(3) A, B, C, D (4) D, C, B, A

4. 1594 இல் தந்துறே என்னுமிடத்தில் போர்த்துக்கேயருடன் நடந்த போரில் சண்டை செய்த கண்டியரசன்:-

(1) முதலாம் இராசசிங்கன் (2) மாயாதுன்னை

(3) 1ம் விமலதர்மசூரியன் (4) 2ம் இராசசிங்கன்

5. விமலதர்மசூரியன் 1604 இல் இறந்ததும் அரசுரிமையைப் பெற்றவன் அவனது சகோதரன்:-

(1) சேனரதன் (2) யமசிங்கன்

(3) எதிர்மன்னசிங்கன் (4) இராசசிங்கன் ஆவான்

6. இலங்கையின் பேரரசன் என்பதன் அடையாளமான 'திறிசிங்களாதீஸ்வர' என்ற பட்டப்பெயரைப் பொறித்த மலையக அரசன்:-

(1) மாயாதுன்னை (2) 2 ஆம் இரரசசிங்கன்

(3) நரேந்திரசிங்கன் (4) விமலதர்ம சூரியன்

7. 1638 இல் 2ஆம் இராசசிங்கன் ஒப்பந்தம் செய்த ஐரோப்பிய இனத்தவர்:-

(1) பிரித்தானியர் (2) போர்த்துக்கேயர்

(3) ஒல்லாந்தர் (4) பிரான்சியர்

8. 1638 ஆம் ஆண்டு போர்த்துக்கீச தளபதி தியோகோ டிமெல்லோ தலைமையில் கண்டியரசனுக்கெதிராக நடைபெற்ற இறுதிப் போர் நடைபெற்ற இடம்:-

(1) பலன (2) தந்துறே (3) கணேதன்ன (4) கன்னொறுவ

9. போர்த்துக்கேயரை ஒல்லாந்தர் இறுதியாக இலங்கையிலிருந்து துரத்திய ஆண்டு:-

(1) 1638 (2) 1658 (3) 1636 (4) 1676

10. இரண்டாம் இராசசிங்கன் இறந்த ஆண்டு:-

(1) 1687 (2) 1656 (3) 1557 (4) 1682

11. இரண்டாம் விமலதர்மசூரியன் 1707 இல் இறந்தபின் கண்டியின் அரசன்:-

(1) 2 ஆம் இராசசிங்கன் (2) ஸ்ரீ விக்கிரமபாகு

(3) வீர பராக்கிரம நரேந்திரசிங்கன் (4) நரேந்திரசிங்கன்

12. நாயக்க வம்சத்தைச் சேர்ந்த கண்டியரசன்:-

(1) ஸ்ரீ விஜய இராசசிங்கன் (2) 2 ஆம் இராசசிங்கன்

(3) நரேந்திரசிங்கன் (4) ஸ்ரீவீர பராக்கிரமபாகு

13. ஒல்லாந்தர் முதன் முதலாக மலையகத்தின் மீது படையெடுத்த போது ஆட்சி செய்த மன்னன்:-

(1) 2ம் விமலதர்மசூரியன் (2) ஸ்ரீ விஜய இராசசிங்கன்

(3) கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் (4) 2ம் விமலதர்மசூரியன்

14. ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றியது:-

(1) 1766 (2) 1796 (3) 1658 (4) 1766

15. 1798 இல் இராசாதிராசசிங்கன் இறந்ததும் கந்தசாமி எனப் பட்ட நாயக்க வம்ச அரசன் என்ன பெயருடன் அரசானானான்?

(1) ஸ்ரீ விக்கிரம இராசசிங்கன் (2) கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன்

(3) விமலதர்மசூரியன் (4) நரேந்திரசிங்கன்

16. மலையக இராச்சியத்தின் பெரும் பகுதியில் செய்கை பண்ணப் பட்ட பயிர்ச் செய்கை:-

(1) நெற்செய்கை (2) சேனைப் பயிர்ச் செய்கை:-

(3) காய்கறிச் செய்கை (2) சிறு தானியச் செய்கை

17. மலையக இராச்சியத்தின் வர்த்தகம் எத்தகையது?
(1) ஏற்றுமதி இறக்குமதி (2) சர்வதேச
(3) பண்டமாற்று (4) உள் நாட்டு

18. அதிகார், திசாவை போன்ற பதவிகளுக்காக அரசனால் அவர்களுக்கு வழங்கப்பட்ட நிலங்கள்:-
(1) தேவாலகம் (2) விகாரகம்
(3) மாணியம் (4) நிந்தகம்

19. கண்டிச் சிற்பக்கலைக்கு பிரசித்திபெற்ற தேவாலயம்யாது?
(1) மதவெலதேவாலயம் (2) அம்பக்கே தேவாலயம்
(3) நிந்தகல தேவாலயம் (4) தெகல் தொறுவ

20. பிரித்தானியர் கண்டியைக் கைப்பற்றியது:-
(1) 1796 (2) 1805 (3) 1815 (4) 1833

## மாதிரி வினாத்தாள்: 3

# சமூகக்கல்வியும் வரலாறும்

1 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் (1), (2), (3), (4) என்று இலக்கமிடப்பட்டிருக்கும் விடைகளுள் சரியானது அல்லது மிகவும் பொருத்தமானது என நீர் கருதுவதனைத் தெரிவு செய்க.

மறுபக்கத்திலுள்ள விளக்கப்படத்தினை அவதானித்து 1—10 வரையிலான வினாக்களுக்கு விடை தருக.

1. இலங்கைத் தீவு அமைந்துள்ள சதுரம்:-
(1) C4 (2) C5 (3) C3 (4) C2


2. I என்று எழுத்திட்ட நதியின் பெயர்:-
(1) நைல் (2) கங்கை (3) மிசூரிமிசிசிப்பி (4) அமேசன்

3. மத்திய கிழக்கு நாடுகள் காணப்படும் சதுரம்:-
(1) B 4 (2) B 3 (3) C 4 (4) C 5

4. C2 என்ற சதுரத்துள் அடங்கும் பிரதேசத்துக் காலநிலை:-
(1) பருவக்காற்றுக் காலநிலை.
(2) மத்திய கோட்டுக் காலநிலை.

(3) அயன மண்டலக் காலநிலை.

(4) மத்திய தரைக்கடற் காலநிலை.




5. இமயமலை அமைந்துள்ள சதுரம்:-

(1) C 5 (2) B 1 (3) C 2 (4) B 5

6. கீழைத்தேச நாடு ஒன்று கைத்தொழிலில் முன்னேறியுள்ளது. அந்த நாடு அமைந்துள்ள சதுரம்:-

(1) B 1 (2) B 2 (3) B 6 (4) B 5

7. படத்தில் நிழற்றப்பட்டு பிரதேசங்களில் நிலவும் காலநிலை நிலைமை:-

(1) கடுங்குளிர் (2) கடும் மழை

(3) கடும் ஈரலிப்பு (4) கடும் வெப்பம்

8. வட கடல் காணப்படும் சதுரம்:
(1) A 3 (2) A 2 (3) B 1 (4) B 3

9. நன்னம்பிக்கைமுனை காணப்படும் சதுரம்:-
(1) D 4 (2) E 2 (3) D 6 (4) C 3

10. பனாமாக்கால்வாய் காணப்படும் சதுரம்:-
(1) B 1 (2) C 2 (3) B 4 (4) E 2

11. மத்திய கோட்டு அமைதி வலயம் அமைந்திருக்கும் நிலையம்:-
(1) 5° வட, 5° தென் அகலாங்குகளுக்கிடையில்
